Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1283)


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 07 ஞாயிற்றுக்கிழமை (19.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 141










# கூட்டமைப்பு - சிவில் சமூக சந்திப்பு

# ஊடகவியலாளருக்கு அனுமதிமறுப்பு



(வவுனியா)

தமிழ் சிவில் சமூகத்துடன், நேற்றையதினம், வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய கலந்துரையாடலில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன், புகைப் படம் எடுப்பதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டமையானது ஊடக வியலாளர்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் சிவில் சமூகம் விடுக்கும் அழைப்பு எனும் தலைப்பில் தமிழ் சிவில் சமூகத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாகவே, கூட்டமைப்பும், தமிழ் சிவில் சமூக பிரதிநிதிகளும் நேற்றையதினம் சந்தித்துக் கலந்துரையாடினர். வவுனியா சென்.அன்ரனிஸ் தேவாலயத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. தமிழ் சிவில் சமூகம் விடுக்கும் அழைப்பு எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் 77பேரின் பெயர்கள் இருந்தபோதிலும் நேற்றைய சந்திப்பில் குறைந்தளவிலானோரே கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, நேற்றைய சந்திப்பு மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை அதிகரிக்காது

நாடு தற்போது உள்ள நிலையில் பாண் விலையை அதிகரிக்கும் எண்ணம இல்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தமது சங்கத்தின் நிறைவேற்றுக் குழு நேற்று முன்தினம் கூடி இந்த முடிவை எடுத்ததாக அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார்.

எனினும் சில பேக்கரி உற்பத்திகளுக்கான விலை அந்தந்த பேக்கரி உரிமையாளர்களால் உயர்த்தப்படும் என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாண் உற்பத்தியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாக அவர் கூறினார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## 40 வீத சம்பள அதிகரிப்பு வலியுறுத்தி ஜே.வி.பி. போராட்டம்


(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளினால் மக்களின் வாழ்க்கைச் செலவு வெகுவாக உயர்வடைந்துள்ளதாகவும் எனவே நாற்பது வீத சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டுமெனவும், ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு வலியுறுத்தி வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்போவதாக ஜே.வி.பி. ஆதரவு தொழிற்சங்கமான அனைத்து கம்பனி ஊழியர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர அரசியல் தீர்வின் தேவை பிரிட்டன் எம்.பி.யிடம் விரிவாக விளக்கம்

யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு போன்ற விடயங்களின் தேவைப்பாடுகள் குறித்து யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரும், பொதுநலவாய நாடாளுமன்றத் தலைவருமான சேர் அலன்ஹார்சல் துறுஸ்ட்டிற்கு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களால் யாழ், கிளிநொச்சி (15 ஆம் பக்கம் பார்க்க)



## நன்மதிப்பை வென்றெடுப்பதற்கு சுயாதீன விசாரணை அவசியம்

### சர்வதேச அனர்த்தக்குழு வலியுறுத்து

நன்மதிப்பை வென்றெடுக்க இலங்கையில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்படவேண்டியது மிக்வும் அவசியமானது என சர்வதேச அனர்த்தக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை இராணுவம் தனது நற்பெயரை தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சர்வதேச அனர்த்தக் குழுவின் இலங்கைப் பணிப்பாளர் அலன்கீனன் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் சுயாதீனவிசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற அமெரிக்காவின்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் விபத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மாதகல் லூர்த்ஹெபி ஆலயத் திருவிழா தற்போது இடம்பெற்று வருகின்றது. அப்பகுதியில் நின்ற பயணிகள் பஸ்சின் சாரதி தேனீர் அருந்தக் கடைக்குச் சென்றவேளை, போதையில் இருந்த நடத்துனர். வாகனத்தை இயக்கியுள்ளார். வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின் கம்பத்தோடு மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில், மாத

(15 ஆம் பக்கம் பார்க்க)

## தங்க பிஸ்கட் விற்பனை இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக தங்க பிஸ்கட்டுக்காளை விற்பனை செய்ததாகத் தெரிவித்து யாழ். நகர நகை வியாபாரிகள் இருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் எவரும் தங்க பிஸ்கட்டுக்களை விற்பனை செய்யக் கூடாது என்ற சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் மேற்படி நபர்கள் இருவரும் தங்க பிஸ்கட்டுக்கள் விற்பனையில் ஈடுபட்டதாகவும் இந்த நிலையிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நாளை மறுதினம் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மேலைத்தேய சக்திகளின் சதிக்கு எதிர்க்கட்சித் தலைவரும் துணை

### குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் டலஸ்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான மேலைத்தேய சக்திகளின் சதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் துணை போவதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான ஆவணமொன்றை எதிர்க்கட்சித் தலைவர் கடந்த 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதில் சனல்-4 குற்றச்சாட்டு

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பாம்பு தீண்டி சாரதி மரணம்

இலங்கைப் போக்குவரத்து பருத்தித்துறை சாலையின் சாரதியாகக் கடமையாற்றும் ஒருவர் இரவுவேளை வீட்டில் நித்திரையில் இருந்தபோது விஷப்பாம்பு தீண்டி மரணமான சம்பவம் ஒன்று தும்பளையில் இடம்பெற்றுள்ளது. தும்பளையைச் சேர்ந்த கோபாலு சுதாகரன் (வயது - 31) என்பவரே நேற்று முன்தினம் இரவு பாம்பு தீண்டி மரணமானவராவர். இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# கூட்டுறவுச் சபை ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வும், யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் முதலாவது தலைவர் சி.சிவமகாராஜா மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் முதலாவது செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் ஆகியோரின் உருவப்பட திரைநீக்க நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை ஊழியர் நலன்புரி சங்கத் தலைவர் ந.ஆனந்தராஜா தலைமையில் நேற்றுக் காலை 11.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இராஜாராம் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை என்பன இடம் பெற்றது.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இராஜாராம் கூட்டுறவு சபையின் முதலாவது தலைவர் சி.சிவமகாராஜாவின் உருவப்பட திரைநீக்கத்தினையும், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் இலகுநாதன் கூட்டுறவு சபை செயலாளர் சு.சிவசுப்பிரமணியத்தின் உருவப்பட திரைநீக்கத்தினையும் செய்துவைத்தது டன் மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் வேதவள்ளி, நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர், செயலாளர், முன்னாள் தலைவர்கள், முன்னாள் செயலாளர்கள், அங்கத்தவர்கள் மற்றும் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எஸ்)

# மின்வெட்டில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நேற்று அறிவித்தபடி இன்று இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் ஆகிய பிரதேசங்களில் மின்வெட்டு இடம்பெறாது.

ஆனால் உரும்பிராய், கோண்டாவில், நல்லூர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, மனோகரா சந்தி, கஸ்தூரியார் வீதி, கச்சேரியடி, பாஷையூர், குருநகர் கொன்மன்ட் ஆகிய பிரதேசங்களில் இன்று மின்வெட்டு நடைமுறையில் இருக்கும்.

மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும், வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதாலும்

21.02.2012 செவ்வாய்க்கிழமை, 23.02.2012 வியாழக்கிழமை மற்றும் 26.02.2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடிய பாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, 22.02.2012 புதன்கிழமை மற்றும் 24.02.2012 வெள்ளிக்கிழமை தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

25.02.2012 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, குப்பிளான் பிரதேசத்தின் ஒரு பகுதி, அற்பை, மயிலங்காடு பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

# மண்ணெண்ணெய் முத்திரை இன்று முதல் விநியோகம்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி. கோப்பாய் அமைப்பாளருமான இ.ஐங்கரன், சமுர்த்தி முகாமையாளர் திருமதி சுகந்தி குணசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (135)


# MANAGEMENT TRAINEE

## (Marketing)

## Jaffna

DAMRO

DAMRO is South Asia's Largest Furniture Manufacturer, specialized in office and household furniture. Today DAMRO brand of furniture has become synonymous with quality & durability with unmatched elegance. Our products are marketed through showrooms and dealer channels in Sri Lanka, India and Australia.

With recent expansions, we seek to recruit a dynamic & hard working individual as a **Management Trainee** for the mega showroom, which will be opened in near future in Jaffna.

**Applicant should possess :**

- ☑ a degree in marketing or part qualification in CIM/SLIM or equivalent.
- ☑ good communication, coordination and PR skills.
- ☑ willingness to work long hours and commitment to achieve targets.

Applicant should be a male under 30 years of age & be a permanent resident within 30km from the above area.

Upon successful completion of a training period based on individual performance, he will be placed as a showroom manager of the above mega showroom with an attractive remuneration package.

If the above position is of interest to you, please forward a detailed resume with your contact number & contact details of two non- related referees to reach us within 10 days of this advertisement.

**The Human Resources Manager,**
**DAMRO**
**No: 361, Kandy Road,**
**Nittambuwa.**
**E-mail: hrm@damro.lk**

(R/120)


# சிவபூரணி முத்தமிழ் மன்ற மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரி விழா நாளை இடம் பெறவுள்ளது.

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகிலுள்ள நிலைய மைதானத்தில் ந.து. ஜெயதீஸ்வரன் தலைமையில் மாலை 7.30 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன், ரி.வரதராஜன், நாக தமிழிந்திரன், தெ.நிஷாகரன், ஆ.இராசசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

# இடைவிலகிய மாணவர்களுக்கு குறுகிய கால தொழிற்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் EKSP செயற்திட்டத்தினால் வழங்கப்படும் குறுகியகால தொழிற்பயிற்சி கல்விப் பிரிவின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கென பல்வேறு தொழிற்பயிற்சி நெறிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தரம் 09, 10, 11 ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்று பின் கல்வியைத் தொடர முடியாது இடைவிலகிய மாணவர்களின் நன்மை கருதி இச்செயற்திட்டம் அமுல் படுத்தப்படுகிறது.

வெல்டிங் பயிற்சிநெறி, வீட்டு மின் இணைப்பு, மரத்தளபாட தொழிற்பயிற்சி, கட்டுமான தொழிற்பயிற்சி, குழாய் பொருத்தும் பயிற்சி ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதால் இடைவிலகிய மாணவர்கள் இதற்கான விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்தி செய்து EKSP செயற்திட்ட முகாமையாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (03)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)

சொர்க்கத்தைத் தேடிப்போகவேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் காட்டும் அன்பு, உதவி இவற்றால் கிடைக்கும் மன நிறைவே சொர்க்கம். - பாபா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வல்லரசு நாடுகளுக்கு எதிரான சமநிலை!

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேற்குலக நாடுகள் நேட்டோ என்ற பெயரிலான கூட்டணி அமைத்துக்கொண்டு ஏனைய சிறு சிறு நாடுகளை எல்லாம் மிரட்டித் தான்தோன்றித்தனமாக நடந்து வருவது குறித்து உலகின் பெரும்பான்மையான நாடுகளுக்கு அதிருபதியும் பொருமலும் உண்டு.

முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், வல்லரசு, எதேச்சாதிகாரம் என்றெல்லாம் அறிஞர்களும் முற்போக்காளர்களும் காலங் காலமாகக் கண்டனங்களைத் தெரிவித்து வருகிறார்கள். சில நாடுகளின் தலைவர்களே துணிச்சலாகவும் முழு அக்கறையுடனும் இந்த வல்லரசு நாடுகளை எதிர்ப்பதில் உலக நாயகர்களாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சமீப காலத்தில் அமெரிக்காவுக்குத் துணிச்சலாக எதிர்வினையாற்றிய சதாம் ஹூசைனும் முஅம்மர் கடாபியும் அழிக்கப்பட்டார்கள். இன்று அத்தகைய எதிர்வினையாற்றிக் கொண்டிருப்பவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் ஈரானின் அஹமதி நெஜாத். இன்னொருவர் வெனிசூலாவின் ஹியூகோ சாவேஸ்.

சைமன் பொலிவர், சே குவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ போன்ற போராளிகளின் வழியில் அசாத்திய துணிச்சலைக் காட்டுபவர் சாவேஸ். பலரால் புரட்சியாளராகவும் பார்க்கப்படுகிறார்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஐ.நா. பொதுச் சபையில் பல நாட்டுப் பிரதிநிதிகள் கூடியிருந்தபோது, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை "சாத்தான்" என்று திட்டினார். சாவேஸ் அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. இது தொடர்பாக பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்தபோதும், தனது பேச்சில் இருந்து பின்வாங்கவோ, வருத்தம் தெரிவிக்கவோ மறுத்துவிட்டார்.

"அமைதியாக இருக்கும் நாடுகளில் கலகத்தை உருவாக்கி, குண்டுகளை வீசும் ஆளை எப்படி அழைப்பீர்கள்?" என்று திருப்பிக் கேட்டார். "கொடுங்கோலன், போதைப் பொருள் கடத்துபவன் என்றெல்லாம் புஷ் என்னை வசை பாடியபோது உங்கள் அக்கறை எங்கேயிருந்தது?" என்று சாதுரியமாக வாதிட்டார். இப்படிப் பேசுவதும் நடந்துகொள்வதும் தான் சாவேஸின் குணம்.

அதுபோலவே ஈரான் ஜனாதிபதி அஹமதி நெஜாத்தும் வல்லரசுகளை எதிர்ப்பதில் பின்வாங்காதவராக இருக்கிறார். "மேலைநாடுகள இரட்டை நாக்குகள் கொண்டவை. அணு ஆயுதங்களை அவர்கள் வைத்துக்கொள்ளலாம் ஆனால், நாம் (ஈரான்) வைத்துக்கொள்ளக் கூடாது என்கிறார்கள்" என்று பேசுவது மட்டுமில்லை, யுரேனியம் செறிவூட்டுவதை நிறுத்தாது தொடர்கிறார்.

அணுஆயுதம் தயாரித்துவிட்டதாக ஈரான் சொல்லவில்லை என்றாலும், யுரேனியத்தைச் செறிவூட்டும் திறனை மும்மடங்கு உயர்த்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஈரான் மீது பொருளாதார தடையை விதித்துள்ளன. இந்தப் பொருளாதாரத் தடை ஈரானை ஒன்றும் செய்துவிடாது என்று ரஷ்யா கூறுகிறது. இருந்தாலும்கூட, இந்தப் பொருளாதாரத் தடையின் காரணமாக, ஈரானின் அணுஆயுதத தயாரிப்புத் திட்டம் வெகுவாகத் தாமதப்படும் என்பது ஐரோப்பிய நாடுகளின் எதிர்பார்ப்பு.

தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாக ஈரான் மீது குற்றச்சாட்டை வைக்கிறது இஸ்ரேல். பதிலுக்கு நெஜாத், ஈரானிய அணுநிலைய ஆராய்ச்சியாளர் ஒருவர் பட்டப்பகலில் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை யாருமே கண்டிக்கவில்லையே, ஐக்கிய நாடுகள் சபை இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையே என்று திருபபிக் கேட்கிறார்.

அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ஏனைய நாடுகளைப் பயமுறுத்தி அடக்கி வெல்வதனை ஒருவித கையாலாகாத்தனத்தோடு பார்த்துக் கொண்டிருப்பவர்கள், இத்தகைய துணிச்சல்காரர்களை வரவேற்கிறார்கள். இவர்களைப் போன்றவர்களால்தான் உலகில் ஓரளவுக்கேனும் வல்லரசு நாடுகளுக்கு எதிரான சமநிலை நிலவுகிறது என்றும் கருதுகிறார்கள்.

ஆனால், சதாம் ஹூசைன், முஅம்மர் கடாபி பட்டியலில் ஹியூகோ சாவேஸூம் அஹமதி நெஜாத்தும் சேர்ந்துவிடக்கூடாதே என்பதுதான் பெரும்பாலோர் அச்சம். - ஆசிரியர் -

# கிழக்கு பல்கலையில் விஞ்ஞானபீடம் மட்டு.பிள்ளையாரடியில் அமையும்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தினை மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அதற்காக ஒதுக்கப்பட்ட காணியில் அமைப்பது தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை மாலை கல்லடி றிவைறா விடுதியில் நடைபெற்றது.

சீன அரசாங்கத்தின் உதவியுடன் இப்பீடத்திற்கான கட்டடத்தின் ஆரம்பக்கட்ட வேலைகள் 360 மில்லியன் ரூபா செலவில் இடம்பெறவுள்ளன.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில், பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி டாக்டர் கே.கருணாகரன், அதன் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எம்.அருளானந்தன், புற்று நோய் வைத்திய ஆலோசகர் டாக்டர் திருமதி கனியானி மிரண்டா, பிரதியமைச்சரின் இணைப்பு செயலாளர பொன் ரவீந்திரன் உட்பட விரிவுரையாளர்கள் மற்றும் முக்கியஸ்த்தர்கள் கலந்து கொண்டனர்.

இதற்காக உயர்கல்வியமைச்சின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 4500 மில்லியன் ரூபா இன்னும் பயன்படுத்தாமல் உள்ளது.

இந்த பீடத்தினை சகல வசதிகளுடனும் கூடிய வகையில் நிர்மாணிப்பதற்கு உயர்கல்வியமைச்சின் உடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பாலியல் துஷ்பிரயோகம்; வயோதிபருக்கு வழக்கு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த வயோதிபர் ஒருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

வவுனியா - செட்டிக்குளம் கண்ணாடி பாடசாலை பிரதேசத்தில் சிறுமிகள் இருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 6 ஆம் திகதி இந்த பாலியல் வன்முறை சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், குறித்த சிறுமிகளின் உறவினர்கள் நேற்று முன்தினம் செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனை அடுத்து உடனடியாக செயற்பட்ட செட்டிக்குளம் பொலிஸ் 59 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் நேற்று வவுனியா நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## அதிவேக பாதை அமைப்பு

(கொழும்பு)

கொழும்பு சுற்றுவட்ட அதிவேக வீதியின் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில், கடவத்தையில் இடம்பெறவுள்ளது. இதன்பொருட்டு 44.88 பில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

3 கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் அதிவேக பாதை 29.1 தூரத்திற்கு அமையவுள்ளது.

## கந்தளாயில் வீதி விபத்து இருவர் பலி; ஒன்பது பேர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை - கந்தளாய் - கித்துலுஉதுவ பகுதியில் பாலம் ஒன்றிற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியானதோடு மேலும் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர். கித்துலுஉதுவ பாலத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தில் நேற்று அதிகாலை வான் ஒன்று மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் வானில் பயணித்த இருவர் உயிரிழந்ததோடு காயமடைந்த 9 பேர் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேச ஆக்கிரமிப்பை முறியடிக்க வேண்டும்

### பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

எமது நாடு சர்வதேச சக்திகளால் ஆக்கிரமிக்கப்படுவதை சில தீய சக்திகள் விரும்புகின்றன. இதனை முறியடிக்க அனைவரும் முன்வர வேண்டும் என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சில சக்திகள் சர்வதேச சமூகத்துடன் இணைந்து நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும் மீண்டும் இந்த நாட்டில் ஆக்கிரமிப்பு ஏற்படுவதனை சிலர் விரும்புகின்றனர்.

இத்தருணத்தில் நாட்டின் சுயாதீனத்தன்மையையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

எனினும், சிலர் சர்வதேச சமூகத்துடன் இணைந்து நாட்டுக்கு எதிராக சூழ்ச்சி செய்து வருகின்றனர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். விஞ்ஞான சங்கத்தின் விழிப்புணர்வுக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான கண்காட்சிப் போட்டி நேற்றுக் காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத் தலைவரும் காசநோய் வைத்திய நிபுணருமான டாக்டர் சி.எஸ்.யமுனானந்தா தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியில் யாழ். மாவட்டத்தின் 11 பாடசாலைகள் பங்குபற்றின.

பாடசாலை மாணவர்களுக்கு விஞ்ஞான விழிப்புணர்வு ஊட்டும் நோக்கத்துடனும், சுற்றாடல் பிரச்சினைகளை விஞ்ஞானத்தின் மூலம் வெளிப்படுத்துவதாலும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தினை விஞ்ஞான ரீதியில் எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்று சிந்திக்க வைக்கும் நோக்கத்துடனும் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்தில் விஞ்ஞான வினாவிடைப் போட்டிகள், பேச்சு , விவரணப்படங்கள், விஞ்ஞான கண்டுபிடிப்புகள் எனப் பல்வேறு செயற்திறன் போட்டிகள் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியுள்ளார்கள். இப் போட்டியில் சிறந்த கண்டு பிடிப்புக்கள் மற்றும் விவரணப்படங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

# புதையல் தோண்டும் முயற்சி தோல்வி; மூவர் சிறைவாசம் செல்கின்றனர்

(வாகரை)

வாகரை - மதுரன்கேணிகுளம் மற்றும் ஓவிலியாமடு ஆகிய கிராமங்களுக்கு இடையலான பிரதேசத்தில் புதையல் தோண்டிய மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களில் விசேட அதிரடிப்படை உறுப்பினர் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது பூஜை பொருட்கள், புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இன்றைய தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தனித்துவமான கல்வி முறைமை வேண்டும்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் விசேட தேவையுடைய மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளில் சுமார் 847 விசேட தேவையுடைய மாணவர்கள் தரம் 1 இல் இருந்து கல்வி கற்று வருகின்றார்கள். இவர்கள் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்திருந்து கல்வி கற்பதால் மன உழைச்சலுக்கும், இன்னல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இவர்களுக்கான கல்வியைப் பயிற்றப்பட்ட 10 ஆசிரியர்கள் வழங்கி வருகின்றார்கள். இவர்கள் கல்வி கற்பதற்கு வேண்டிய வளங்களையும் பெற்றுக்கொள்வதில் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுவதுடன், இவர்களைத் தனிமையாக வைத்து கல்வி கற்பிப்பதற்குரிய வசதிகளும் செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து படிப்பதால் உளவியல் தாக்கத்திற்கும் இவர்கள் ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவர்களின் எதிர்கால கல்வி வளர்ச்சி குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களும், அரசும் உதவிகளை வழங்க வேண்டுமென சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (142)

# இரவு நேர மீன் வியாபாரத்தால் பயணிகள் பெரும் அசௌகரியம்

(கொக்குவில்)

நல்லூர் பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் கொக்குவில்-குளப்பிட்டிச் சந்தையில் இரவு நேரங்களில் வீதியோரங்களில் மீன் வியாபாரம் நடைபெற்று வருவதால் பயணிகள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை வீதியில் வாகனப் போக்குவரத்து அதிகம் காணப்படும் மாலை 5 மணிக்குப் பிறகு சந்தையின் நுழைவாயிலில் மீன் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சந்தையின் நுழை வாசலில் இவ் விற்பனை நடைபெறுவதால் வீதியால் பயணம் செய்பவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்வது மட்டுமல்லாமல், வீதியைக் குறுக்கறுத்து ஓடும் கட்டாக்காலி நாய்களால் விபத்துக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தையில் இரவு நேர மீன் வியாபாரம் செயவது தவறில்லை என்றும் அதனைச் சந்தை வளாகத்தில் விற்பனை செய்யும் இடத்தில் மேற்கொண்டால் எவருக்கும் பாதிப்பு இல்லை என்றும் இது சம்பந்தமாக நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# திட்டமிடல் சேவை தரம் III விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட, திறந்த போட்டிப் பரீட்சைக்கு (2012) விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின இடதுபக்க மேல் மூலையில் ‘திறந்த போட்டிப் பரீட்சை - திட்டமிடல்’ என்று குறிப்பிட்டு பரீட்சை ஆணையாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பததரமுல்லை என்ற முகவரிக்கும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரூடாக அதே திகதி முகவரிக்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை (கல்வித் தகைமை உட்பட) 2012.02.17 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (10)

# குடாநாட்டில் சின்ன வெங்காயம் அமோகமான விளைச்சல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் இம்முறை சின்ன வெங்காயச் செய்கையில் பெருமளவான விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் பகுதிகளில் புத்தூர், ஆவரங்கால், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, இடைக்காடு, உரும்பிராய், மருதனார் மடம், இணுவில், உடுவில், சுன்னாகம், தெல்லிப்பளை, அளவெட்டி ஆகிய பகுதிகளில் வெங்காயப் பயிர் நன்கு செழித்து பச்சப்பசேலலென காட்சி அளிப்பதைக் காணக கூடியதாகவுள்ளது.

யாழ்.மாவட்ட சந்தைகளில் நூறு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ வெங்காயம் தற்போது 30 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சின்ன வெங்காயச் செய்கை அறுவடையின் பின் மேலும் அதன் விலை குறையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியா பாடசாலைகளில் நடமாடும் மருத்துவமுகாம்

(வவுனியா)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட அரச பாடசாலைகளில் நடமாடும் மருத்துவ முகாமொன்றினை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஏற்பாடு செய்துள்ளது.

இதன்போது மாணவர்களது கண், காது, பல் மற்றும் உடல் நலம் என்பன பரிசோதனை செய்யப்பட்டு வருவதுடன், குறைபாடுகள் காணப்படும் மாணவர்கள் வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சையினைப் பெறுவதற்கும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை ஒன்றில் அதிகளவான மாணவர்கள் மேலதிக சிக்சை பெறவேண்டிய தேவை காணப்படும் இடத்து பாடசாலையிலேயே சிகிச்சையினை வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொளளப்பட்டுள்ளது.

இம்மருத்துவ முகாமில் வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ உதவியாளர்கள், மருத்துவ மாதுக்கள் என்போர் பங்குபற்றி வருகின்றனர்.

# விசேட பேருந்து சேவை

(வடமராட்சி)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை சாலை இரண்டு பேருந்துகளை விசேட சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடம்பெறவுள்ள இவ் விசேட சேவைக்கான ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம் என்றும், பக்தர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மேலதிகமாக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் பருத்தித்துறை சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (100)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர்க் கிளை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவு புனரமைக்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர்ப் பிரிவினைப் புனரமைக்கும்படி யாழ்.கிளை ஆளுநர்சபை தீர்மானித்து வி.பரமசிவம் தற்காலிக தலைவராகவும், வைத்திய கலாநிதி கந்தையா சபாரத்தினம், கே.ஜெயரட்ணம், எஸ்.பத்மராஜா ஆகியோர் அடங்கிய தற்காலிக குழுவாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு தேவையான நடைமுறைகளைத் தீர்மானித்து யாழ்.கிளையின் அறிவுரையின் படி நல்லூர் பிரதேச மக்களின் நன்மைக்காக இயங்க வைக்கும் அதிகாரத்தை இக்குழுவுக்கு யாழ்.கிளை வழங்கியுள்ளது.

நல்லூர் சங்கத்தைப் புனரமைக்கும் போது 2012 ஆம் ஆண்டுக்கான உறுப்பினர்களையும் பழைய உறுப்பினர்களையும் சேர்த்து பொதுச்சபைக் கூடடத்தைக் கூட்டி அச்சங்கத்தை இயங்க வைக்கும் முறையில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

எனவே நல்லூர்ப் பிரிவில் இருந்து விரும்புபவர்கள் இவர்கள் மூலமாக உறுப்பினர் உரிமையைப் பெற்று இச்சங்கம் நல்லூர் மக்களுக்குச் சேவை செய்வதற்கான வழிவகையைச் செய்யும்படி அவர் கேட்டுக்கொணடுள்ளார்.

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய ‘ஆறுமுக நாவலர்’ என்ற சிறுவர்களுக்கான நூலின் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள அன்பொளி கல்வியகத்தில் வே.அன்பழகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் நாவலரின் வாழ்வும் வளமும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. (10)

# மண்ணெண்ணெய் நிவாரணம் நல்லூரில் இன்று ஆரம்பம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமுர்த்தி அதிகார சபையினால் மானிய அடிப்படையில் மண்ணெண்ணெ முத்திரை வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.


நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. எம்.பியும், நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பொறுப்பாளருமான அ.இரவீந்திரதாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கி தலைமை முகாமையாளர் தி.சந்திரகாசன் மேற்கொண்டுள்ளார்.





ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி முன்பள்ளியின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை மிக கோலாகலமாக முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இக்கால்கோள் விழாவிற்கு வருகை தந்த விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பழைய மாணவர்கள் புதிய மாணவர்களை பூச்செண்டு கொடுத்து வரவேற்பதையும் காணலாம்.

## காபற் வீதியாக பண்ணைவீதி



(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணைவீதி காபற் வீதியாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. காங்கேசன்துறை வீதியில் இருந்து ஆரம்பமாகும் இவ்வீதி பண்ணை சுற்றுவட்டப்பகுதிவரையும் காபற் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளது இவ் வீதியானது ஏற்கனவே குன்றும் குழியுமாக போக்குவரத்திற்கு சிரமத்தை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.


மேலும் இந்தப் பண்ணைவீதியின் சுற்று வட்டப்பகுதியில் இருந்து கடற்கரையோரமாகவுள்ள கோட்டைப்பகுதி அருகிலும் நாவாந்துறைப்பகுதிக்கும் காபற்இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை பண்ணை சுற்று வட்டப்பகுதியும் அழகுபடுத்தும் வேலைகளும் நடைபெற்று வருகின்றது. (பா)

## மன்னார் மாவட்ட மீனவர்களுக்கும் எரிபொருள் மானியம் வழங்க வேண்டும்

(மன்னார்)

தென்பகுதி மீனவர்களுக்கு அமுல் படுத்தப்படவுள்ள திட்டம் மன்னார் மாவட்ட மீனவர் களுக்கும் அமுல்படுத்தப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தினால் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையை ஈடு செய்ய அரசாங்கம் மானியம் வழங்குகின்றது.



இந்த நிலையில் கடல் தொழில் அமைச்சரின் தலைமையில் இடம் பெற்ற விசேட கூட்டத்தின் போது தென் பகுதி மீனவர்கள் எரி பொருளை நேரடியக எரி பொருள் நிரப்பும் நிலையங்களில் கொள்வனவு செய்யும் போது 25 ரூபாய் விலைக் குறைப்பு செய்து மண்ணெண்ணையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை மன்னார் மாவட்டத்திலும் அமுல்படுத்த வேண்டும் என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் எம்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே மீனவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இந்த நிலையியேலே இத்திடடத்தினை மன்னார் மாவட்ட மீனவர்களுக்கும் அமுல்படுத்த வேணடும் என மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களத்தினூடாக கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் எம்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

## செய்திமடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் 'செய்திமடல்' ஒன்றை வெளியிடுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இச்செய்திமடல், கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப்பணிகளை உள்ளடக்கிதாக வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (142)

## ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி; வடமராட்சியில் 4 பாடசாலைகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 4 பாடசாலைகள் 2013 ஆம் ஆண்டு ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இதில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் ஏற்கனவே மூடப்பட்ட ஆரம்ப பிரிவு வகுப்புக்களை தரம் (1,2) உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், வடஇந்து ஆரம்பப் பாடசாலை என தனியான பிரிவாக இயங்குவதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனையடுத்து இப்பாடசாலையின் நலன்விரும்பிகள் மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவை தனியாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் தரம் 1,2 ஆகிய ஆரம்பப்பிரிவு வகுப்புக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பணித்துள்ளார்.

இதைவிட, இப்பாடசாலைக்கு விரைவில் புதிய அதிபர் ஒருவா நியமிக்கப்படவுள்ளதுடன், ஏனைய 3 பாடசாலைகளுக்கும் ஆரம்ப பிரிவை ஆரம்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகள் தங்கள் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள நிலத்தில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து ஆரம்பப் பிரிவை தொடங்கலாம் எனவும் வடமராட்சி வலயக்கல்விப் பணிபபாளரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (109)

## முரசின் இன்றைய பலன்

(19.02.2012 –ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 07 ஆம் திகதி. திரயோதசி பின்இரவு 4.43 வரை.
நட்சத்திரம் உத்தராடம் முன்இரவு 11.56 வரை. அமிர்தயோகம், பிரதோஷவிரதம்.
இராகுகாலம் 5.02 - 6.32 வரை. சுப நேரம் 9.32 - 11.02 வரை.
எமகண்டம் 12.32 - 2.02 வரை. குளிகைகாலம் 3.32 - 5.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனக்கவலை, பயணச்செலவு, அகாலஉறக்கம், காரிய சாதனை. |
| ரிஷபம் | ஸ்தல வழிபாடு, பொறுமை அவசியம், உறவினர் ஆதரவு, விருந்துபசாரம். |
| மிதுனம் | முதலீடுகளைத்தவிர்க்கவும், சேமிப்பு உயரும், தடைகள் நீங்கும், சிந்தித்துசெயற்படு. |
| கடகம் | இறைவழிபாடு, பய உணர்வு, புத்திரரால் செலவு, அந்நியர் உதவி. |
| சிம்மம் | பயணவெற்றி, அதிகாரம், தன்னிறைவு, ஆன்மீக ஈடுபாடு. |
| கன்னி | அமைதியான வாழ்வு,பணத்தட்டுப்பாடு, புதிய திருப்பம், எதிர்பாராதது கிடைக்கும். |
| துலாம் | உற்சாகம், சுபகாரியங்கள், குலதெய்வ வழிபாடு, நண்பர்கள் விரோதிகளாவர். |
| விருச்சிகம் | பணவரவு, உடன் பிறந்தோரால் உதவி, புரியாத பரிதவிப்பு, தொழில்விருத்தி. |
| தனுசு | குடும்பச் சிறப்பு, பணியில் சிறப்பு, இடமாற்றம், கடன் வசூலாகும். |
| மகரம் | சுபசெய்திகள், தொழில்துறை பலம் பெறும், சகோதரர் உதவி, விடா முயற்சி. |
| கும்பம் | சங்கட நிலை, மக்கட்பேறு, லட்சுமிகடாட்சம், அந்தஸ்து உயரும். |
| மீனம் | எதிர்ப்புகள், முன் எச்சரிக்கை, மெளனம் நன்று, குடும்ப முன்னேற்றம். |

## சிவராத்திரி விரதம்

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரியை முன்னிட்டு நாளை 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிமுதல் நாளை மறுதினம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிவரை இராமநாதன் வீதி திருநெல்வேலியில் உள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் சிவராத்திரி நிகழ்வு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

20ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆகம். நிகழ்வில் வேதபாராயணம், பாலவிகாஸ்பஜனை, திருவாசகம், சிவநாமபஜனை, ஓம் காரம் சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம், விசராத்திரி நிறைவுரை மகா மங்கள வாத்தியத்துடன் என்பவற்றுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவுபெறவுள்ளன.

□ □ □

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவர நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை திங்கட்கிழமை மகாசிவராத்திரி விரத பூசை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

நான்கு ஜாமப்பூசை லிங்கோற்பவகால பூசை என்பவற்றுடன் சமயச்சொற்பொழிவு, பக்திப் பஜனைப் பாடல்களும் இடம்பெறும்.

அதிகாலை 5 மணிக்கு சுவாமி வீதியுலா எழுந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (68)

## தொழிற்பயிற்சிக் கற்கை நெறி போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்து முறை சாராக் கல்விப் பிரிவினரால் தொழிற் பயிற்சிக் கற்கை நெறிகளைப் போதிக்கக் கூடிய போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணினிப்பயிற்சி, புத்தகம் கட்டுதல், தையல் பயிற்சி, கேக் ஐசிங், பற்றிக் வேலை, உணவு பதனிடல், ஸ்கிறீன் பிறிண்டிங் முதலான கற்கை நெறிகளைப் போதிக்கக் கூடிய போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.


விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் தாங்களே விண்ணப்பப்படிவத்தினைத் தயாரித்து வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையிலுள்ள முறைசாராக் கல்விப் பிரிவில் ஒப்படைக்கும்படி வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்படவுள்ள போதனாசிரியர்கள் மாதத்தில் 50 மணித்தியாலயங்கள் இந்தப் பயிற்சிகளை வழங்க வேண்டும் எனவும் மணித்தியாலயத்திற்கு 175 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார். (06)

## வடமராட்சி கிழக்கில் வாழ்வாதார உதவிகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு முதற்கட்ட வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமஅலுவலர் பாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இவ்வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் பயனாளிகளுக்கு கட்டுமரம், வலைகள், தையல் இயந்திரம் கோழிக்கூடு, கோழிகள் மற்றும் பல்பொருள் வாணிபத்திற்கான வியாபாரப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. இதில் மீள்குடியமர்ந்த 60 குடும்பங்களில் முதற்கட்டமாக 21 குடும்பங்களுக்கு சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு நடராசா திருலிங்கநாதன், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், சோ.ஆ நிறுவனத்தின் மருதங்கேணி பிரதேச இணைப்பாளர் யோகநாதன் சிவயோகராஜன் நாகர் கோவில் மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் முடியப்பு ஜோசப் ஜோன்சன் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# சேவையை மக்களுக்கு ஒழுங்குமுறைத் தரவே சங்கம்!

## ஆட்டோ சங்கத் தலைவருடனான செவ்வி

"ஆட்டோ தொழில் என்பது சுவீப் ரிக்கற் மாதிரி ஒவ்வொரு நாளும் உழைப்பு வருமென்றில்லை. ஒரு நாளைக்கு ஐநூறு ரூபாவும் கிடைக்கும், ஆயிரம் ரூபாவும் கிடைக்கும். சில வேளை ஒன்றும் இல்லாமலும் இருக்கும். வருமானம் கிடைத்தால் சந்தோசம். கிடைக்கவில்லை என்றால் துக்கம் தான். அந்த நிலை கவலைக்குரியதாக இருக்கும்" எனத் தெரிவித்தார் யாழ்மாவட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் இ.ஆர். போல் ஜெயகாந்தன். தினமுரசு சார்பில் அவரைப் பேட்டி கண்டோம். யாழ். முனியப்பர் வீதியில் 40 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கத்தின் பணிமனையில் அவர் வழங்கிய நேர்காணலின் விபரம் வருமாறு:



**கேள்வி:** இயல்பு நிலை திரும்பி யதன் பின்னர் உங்களது சங்கத்தின் நிலை எவ்வாறு இருக்கிறது?

**பதில்:** 1990 களில் யாழ். நகரை மையமாக வைத்து வடமாகாண முச்சக்கர வண்டி சேவைகள் சங்கம் எனும் பெயரில் எமது சங்கம் இயங்கிவந்தது. அதில் சுமார் 150 வரையான ஆட்டோக்களே பதிவு செய்திருந்தன. ஆனால் இன்று சங்கத்தின் பெயர் மாற்றப்பட்டு யாழ். மாவட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கம் என்னும் பெயரில் இயங்கி வருகின்றது. சுமார் 678 ஆட்டோக்கள் வரை தமது பதிவுகளை மேற்கொண்டு சேவையில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தத் தொகை மேலும் அதிகரித்துக் கொள்ளும் சாத்தியம் உள்ளது.

**கேள்வி:** உங்களது சங்கத்தில் கூடுதலாக ஆட்டோ உரிமையாளர்கள் இணைந்து கொள்ளுமிடத்து அவர்களுக்கான சங்கத்தின் சேமநலன்கள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றது?

**பதில்:** எமது சங்கமானது பல்வேறு பகுதிகளிலும் கிளைச் சங்கங்களை நிறுவி வருகின்றது. அவற்றின் ஊடாக அங்கத்துவம் பெறுகின்ற ஆட்டோ உரிமையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. அந்த நடவடிக்கை முடிந்ததும் அவர்களுக்குச் சீருடை வழங்கப்படவுள்ளது. தொடர்ந்து ஆட்டோக களுக்கு காசு மீற்றர் பொருத்துவதற்கும் முயற்சி மேற்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:** ஆட்டோ உரிமையாளர் கள் சங்கத்தில் இணைந்து கொள்வது எவ்வாறு உள்ளது?

**பதில்:** அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆட்டோ உரிமையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுவது ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நிறைய ஆட்டோ உரிமையாளர்கள் தமது பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். 678 ஆட்டோக்கள் பதியப்பட்டிருக்கின்றது.

அடையாள அட்டைகள் எல்லோருக்கும் வழங்கப்பட்டதும், வாடகைக்கு ஓடுவது பதிவு செய்யப்பட்ட ஆட்டோக்களுக்கு மட்டுப்படுத்தப்படும். பொது மகக ளுக்குப் பதிவு செய்யபபட்ட ஆட்டோக்களில் பயணிக்க அறிவுறுததப்படும்.. இதன் மூலம், ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் பொலிஸ் தரப்பின் மூலமாக எளிதாக தீர்த்துவிட முடியும்.

முதற்கட்டமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் 83 ஆட்டோ உரிமையாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏனைய பதிவு செய்த ஆட்டோ உரிமையாளர்களுக்கு அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விரைவில் கிளைச் சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

**கேள்வி:** ஆட்டோ ஓட்டுநர்களுக்குச் சீருடை, காசு மீற்றர் பொருத்துவது குறித்துக் கூறினீர்கள் அது குறித்து விபரிக்க முடியுமா?

**பதில:** ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்குவது குறித்து வடமாகாண ஆளுநர், யாழ். அரச அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் தெரிவித்திருக்கின்றனர். முதற்கட்டமாக அடையாள அட்டை அனைத்து ஆட்டோ உரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்டதும் சீருடை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**கேள்வி:** ஆட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவது சம்பந்தமாக...

**பதில்:** வறுமைப்பட்டவர்களே இந்தத் தொழிலில் அதிகமாக உள்ளனர். அவர்களால் 15000 ரூபா செலவில் காசு மீற்றர் பொருத்துவதென்பது முடியாத காரியம். சங்கத்தால் வழங்கும்படி கோரியிருக்கின்றார்கள். அது சங்கத்தால் இயலாத காரியமாகும். இது சம்பந்தமாக அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம். உதவுவதாகத் தெரிவித்திருக்கின்றார். ஏனைய தேவைகள் குறித்தும் விபரம் கேட்டிருக்கின்றார்.

சங்கத்தின் நிதியினைக் கொண்டு சங்கத்தை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எமது அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர் 2000 ஆம் ஆண்டு சங்கத்திற்கான இந்தக் கட்டடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஐந்து இலட்சம் ரூபா நிதியுதவி செய்திருந்தார்.

**கேள்வி:** உங்களது சங்கத்தின் மூலமாக ஆட்டோ சேவை குறித்து...

**பதில்:** ஆட்டோ சேவையை மக்களுக்கான திருப்தியான சேவையாகவே வழங்க எண்ணியிருக்கின்றோம். எங்களிடத்தில் பதியப்பட்ட ஆட்டோக்களுக்கு கண்டிப்பான விதிமுறைகளை வைத்திருக்கின்றோம். அதனால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும்.

**கேள்வி:** தற்போது ஆட்டோத் தொழிலின் நிலை எப்படி இருக்கிறது?

**பதில்:** தினமும் உழைத்து நாளாந்த ஜீவனோபாயம் நடத்தக்கூடிய நிலையிலேயே ஆட்டோத் தொழிலாளர்கள் உள்ளனர். ஒரு கொண்டாட்ட நிகழ்வைக்கூட நடத்த முடியாத நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

**கேள்வி:** அப்படியென்றால்..?

**பதில்:** அதாவது ஆட்டோத் தொழில் என்பது சுவீப் ரிக்கற் மாதிரி. ஒவ்வொரு நாளும் உழைப்பு வருமென்றில்லை. ஒரு நாளைக்கு ஐநூறு ரூபா கிடைக்கும். சிலவேளை ஒன்றும் இல்லாதும் இருக்கும். வருமானம் கிடைத்தால் சந்தோசம், கிடைக்கவில்லை என்றால் அந்த நிலை கவலைக்குரியதாக இருக்கும்.

**கேள்வி:** தற்போதைய எரிபொருள் விலையேற்றம் எவ்வாறு ஆட்டோ சேவையில் தாக்கம் செலுத்துகின்றது?

**பதில்:** அரசாங்கம் தங்களது காரணங்களுக்காக எரிபொருள் விலையை ஏற்றியிருக்கின்றது. பொதுமக்களிடத்தில் வாங்கப்படும் ஆட்டோக்கூலி 100 ரூபாவாக இருந்தால் இனி அதனை 110 ரூபாவாக வாங்க முடியும். அத்துடன் எங்களுக்கு எரிபொருள் மானியம் கிடைப்பதற்கு எமது அமைச்சரே நடவடிக்கை எடுக்க வேண்டும்.



**கேள்வி:** நிதிவளம் இருக்கின்றதா உங்கள் சங்கத்திடம்?

**பதில் :** சங்கத்தின் நிதி என்பது அவர்களது வியர்வை சிந்திச் சேர்க்கப்பட்டது. அந்த நிதியை அவர்களுக்கே பயன்படுத்திக்கொள்ளக் கூடியதாக உள்ளது. மாதச் சந்தா 100 ரூபா அறவிடப்படுகிறது.

**கேள்வி:** அடையாள அட்டை வழங்கப்படுவதால் ஏற்படும் அனுகூலம் என்ன?

**பதில் :** மக்களுக்கும் ஆட்டோ சேவையாளர்களுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகள் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

வரத்து ஆட்டோக்களை நீங்கள் பிடிப்பதால் எங்களுக்கும் அவற்றைக் கண்டுபிடிக்க முடியாது இருக்கிறது. எங்களிடத்தில் பதியப்பட்ட அடையாள அட்டை வழங்கப்பட்ட, ஆட்டோத் தரிப்பிடத்தில் நிற்கும் ஆட்டோக்களைப் பிடிப்பதால் பொதுமக்களுக்கு நாம் எமது சேவையைத் திருப்திப்படச் செய்யலாம். சில வேளைகளில் காசு இல்லாமல் சிக்கலுக்குள்ளாகும் பொது மக்களுக்கு கூட எமது ஆட்டோக்கள் சேவையைச் செய்கின்றன. அவர்கள் போய்ச்சேரவேண்டிய இடங்களுக்கு கொண்டு சென்று விட்டு, காசு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தாருங்கள் எனக்கூறிய சம்பவங்களும் உண்டு.

**கேள்வி:** கிளைச்சங்கங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் எப்படியுள்ளது?

**பதில் :** சுன்னாகம், அச்சுவேலி, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் கிளைச் சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. வேலணை, ஊர்காவற்துறை, நயினாதீவு, மானிப்பாய், சங்கானை ஆகிய பகுதிகளில் கிளைச்சங்கங்கள் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன.

- பார்த்தீபன்


# ஆட்சியைப் பிடிக்கும் ஆசையில் ஐ.தே.க. கூட்டமைப்புக்கும் தேவை அதுதானா?

எரிபொருள் விலையுயர்வு மற்றும் விலைவாசி உயர்வு என்பனவற்றை வைத்துக்கொண்டு, இந்த அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியினர் பேசி வருகின்றனர். ஏகாதிபத்தியப் பின்னணியில் ஈராக், லிபியா போன்ற நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட பலாத்கார ஆட்சி மாற்றங்களுடன், அண்மையில் மாலைதீவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் சேர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களின் மனதில் அதிகார ஆசையை உசுப்பி விட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஒரு டசினுக்கும் அதிகமான தேர்தல்களில் வெற்றிகரமான தோல்விகளுக்குத் தலைமை தாங்கிய ரணில், அதன் காரணமாகக் கட்சிக்குள் தனக்கு ஏற்பட்டுள்ள தலைமைத்துவ நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக கையில் அகப்படும் துரும்பு எதுவாக இருந்தாலும் அதைப் பற்றிப் பிடிப்பதில் ஆர்வமாக இருக்கிறார் என்பதையே, அவரது இந்த ஆட்சிக் கவிழ்ப்பு அறைகூவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையில் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் உரிமை உண்டு. அதற்குத் தேர்தல் தான் வழிமுறை. ஆனால் இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் மனதில் உள்ளது அந்த வழிமுறை அல்ல.

அந்தக் கட்சி தற்போதைய ஆட்சியை அகற்றுவதற்கு தம்முடன் ஒத்துழைக்கும்படி ஜே.வி.பிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் கூட அழைப்பு விடுத்துள்ளது. சோசலிசம் பேசும் ஜே.வி.பியும் பெரும் முதலாளிகளின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் என்ன அடிப்படையில் கூட்டுச்சேரப் போகின்றனவோ தெரியவில்லை.



அதேபோல தமிழின உரிமைகளுக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பல இன வன்செயல்களை நடாத்திய ஐக்கிய தேசியக் கட்சியும் எப்படி கைகோர்க்கப் போகின்றன என்பதும் தெரியவில்லை.

தவிரவும், தற்போதைய அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கின்றது. எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்தாலும் 40 வீதத்தைக்கூட எட்ட முடியாது. நிலைமை அப்படியிருக்க எப்படி அரசாங்கத்தைத் தோற்கடிக்க முடியும்?

இந்த நிலையில் அரசாங்கத்தைத் தோற்கடிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் பேசி வருவது என்ன அர்த்தத்தில் என்ற நியாயமான கேள்வி எழுகின்றது. நிச்சயமாக அது நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறைகளாக இருக்க முடியாது.

எனவே ஆட்சிக் கவிழ்ப்புக்கு எஞ்சியுள்ள ஒரே வழி வன்முறையிலான பாதையாகும். அதையே ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றிப் பேசுபவர்கள் மனதில் கொண்டுள்ளார்கள் என ஊகிக்கலாம். இலங்கைக்கு எதிராக பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து சுமத்தி வரும் ஏகாதிபத்திய சக்திகள், உள் நோக்கத்துடனேயே அதைச் செய்து வருகின்றன. ஏகாதிபத்திய வாதிகளின் சதியின் ஒரு அங்கமாக, இலங்கையில் பலாத்கார வழியில் ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றை நிகழ்த்தி விடலாம் என எதிர்க்கட்சிகள் மனப்பால் குடிக்கின்றன. சில இரகசிய நிகழ்ச்சித் திட்டங்களுடன் இலங்கைக்குப் படையெடுக்கும் அமெரிக்க இராஜ தந்திரிகளை அவை ஓடி ஓடிச் சந்தித்து திட்டங்கள் தீட்டி வருகின்றன.

ஆனால் அவர்களது ஆசை நிறைவேறுமா அல்லது கடந்த காலங்களைப் போல கானல் நீராகிவிடுமா என்பதை இன்னும் சில தினங்களில் அறிந்துவிடலாம்.

- *வி.சின்னத்தம்பி கட்டுரையிலிருந்து*





# யப்பான்...!

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பேரழிவுகளைச் சந்தித்து சில தசாப்தங்களி லேயே உலகமே மூக்கின் மேல் விரல் வைக்கும் அளவுக்கு பொருளா தாரத்திலும் தொழில்நுட் பத்திலும் வளர்ந்த நாடு.

இவர்களின் இந்த பிரமாண்ட வளர்ச்சியின் பின் உள்ளதுதான் 05 (ஐந்து 5) என்கின்ற தாரக மந்திரம். இதனை தமிழில் ஐவிதிகள் (ஐந்து விதிகள்) என்று சொல்வது பொருத்தமானது.

யப்பானிய மொழியில் இவ் ஐவிதிகள் ஆவன செய்ரி (SEIRI), செய்ரோன் (SEITON), செய்சோ (SEISO), செய்கெற்சு (SEIKTSO), செய்சுகி (SHITSUKE) என்றவாறு அமையும்.

இதில் செய்ரி என்பது 'தேவையற்ற வற்றை நீக்குதல்' என்று பொருள்படும். செய்ரோன் என்பது பொருட்களை அவற்றிற் குரிய இடங்களில் வைத்துப் பாவித்தல் என்று பொருள்படும். செய்சோ என்பது தூய்மையாக வைத்திருத்தல் எனப் பொருள் படும் தரப்படுத்தி யும், வகைப் படுததியும் வைத தல் என்பது செய்கெற்பு என் பதன் பொரு ளாகும். செய் வுகி என்பது பயிற்சி எனப் பொருள்படும்.



இந்த ஐவிதி களையும் கடுமையாகப் பின்பற்ற வேண்டிய தேவையும் மனப்பாங்கும் யுத்த அழிவுகளுக்கு உள்ளான யப்பானி யர்களுக்கு இருந்தது.

இந்தத் தேவையும், உத்வேகமான மனப்பாங்குமே யப்பானியர்களை இந்த ஐந்து விதிகளையும் நடை முறைப்படுத்தத் தூண்டுகோலாக இருந்தது.

இதன் மூலம் யப்பானியர்கள் பெற்றுக்கொண்டவை உள்ளுணர்வில் மாற்றம், பண்டங்களின் சேவைகளின் தரம் விருத்தி, பாதுகாப்பு விருத்தி, குறைவான சேதாரங் கள், குறைவான விபத்துக்கள், தொழிலாளர்களின் தன்னம்பிக்கை என்பன.

இதன் மூலம் யப்பானியர்களின் உற்பத்தியின் அளவு, தரம் என்பன உச்ச நிலையை அடைந்ததுடன் இன்றும எம்மவரின் உள்ளங்களில் யப்பானியத் தயாரிப்புக்க ளுக்கு மங்காத இடம் கிடைத்தது.

இந்த ஐந்து விதிகளையும் எமது அலுவலகத்திலும், தொழில் நிலையங்களிலும், ஏன் வீட்டிலும் கூட நடைமுறைப்படுத்தலாம்.

இன்று பாடசாலை மாணவர்கள் தொடங்கி அலுவலக உத்தியோகத்தர்கள் வரை இந்த ஐந்து விதிகளை அறியாதவர்கள் இல்லை எனலாம். ஏனெனில், பாட சாலை பாடத்திட்டத்திலும் அரச ஊழியர்களின் பயிற்சி வகுப்புகளிலும் அடிக்கடி இந்த ஐவிதிகளின் விளக் கங்கள் போதிக்கப்படுகிறது.

ஆயினும், நாம் இவற்றைப் பின்பற்றுவது இல்லை. காரணம் எமது மனப்பாங்கே தேவையற்றவற்றை நீகசுதல் என்ற விதியிலேயே எமது முயற்சிகள் எல்லாம் படுத்து விடுகின்றன. ஏனெனில் எமது மனப்பாங்கு தேவையற்றவற்றை எறிவதற்கோ அழிப்பதற்கோ இடம் தருவதில்லை. எதையுமே சேகரித்து பழக்கப் பட்டு விட்டோம்.

வீட்டை எடுத்துக்கொண்டாலே எத்தனையோ தேவையற்ற பொருட்கள் இடத்தை அடைக்கின்றன. பழைய பாவிக்கமுடியாத பொருட்கள், பழைய புத்த கங்கள், கொப்பிகள், பாவித்த பொருட்களின் அட்டைப் பெட்டிகள், றெஜிபோம் உறைகள், பழைய செருப்புக் களைக்கூட வீச மனமில்லாமல் சேகரித்து வைக்கின் றோம்.

தேவையற்ற பல புத்தகங்கள் கொப்பிகள் பிறகு தேவைப்படும் என்று மூட்டை மூட்டையாக தூசும், துரும்பும்பட கட்டிக் காக்கின்றோம். ஆனால் அவற்றை ஒருமுறையாவது எடுத்துப் பார்க்கிறோமா என்றால் இல்லை. அவற்றை திறந்தாலே தூசும் தும்மலும்தான்.

இவ்வாறு இன்னோரன்ன தேவையற்ற பொருட் கள் வீட்டிலுள்ளன. துரும்பும் பல்குத்த உதவும் என்று பலதையும் சேகரித்து அவசரத்துக்கு ஒரு தாளைக் கூட எடுக்கமுடியாத அளவுக்கு பொருட்களின் கலவை தான்.


அலுவலகத்திலும் இவ்வாறே... கோவைகளிலும், மேசை லாச்சிகளிலும் அலுமாரிகளிலும் தேவையற்ற எவ்வளவோ விடயங்களை இனம் காணலாம். ஆனால் அவற்றை அப்புறப்படுத்துவதற்கு எமது மனம் ஒப்புவது இல்லை. இந்த மனப்பாங்கிலிருந்து மீண்டால் தான் நாம் அடுத்தடுத்த விதிகளுக்கு செல்ல முடியும்.

உதாரணத்திற்கு வீட்டிலிருக்கும் வெற்று பால்மா அட்டைப்பெட்டியை எறிந்தாலே அதற்கு எத்தனையோ வியாக்கியானங்கள் வீட்டில் சொல்லப்படும். ஆனால் அவற்றை வைத்திருந்து வெறுமனே கரப்பானும் பல்லியும் குடிகொள்வதற்கு உதவுவதாகத்தான் அமையும்.

ஒரு இடத்தில் தேவையற்றவற்றை நீக்கிவிட்டாலே அந்த இடம் பளிச்சென்றும் தூய்மையாகவும் தோன் றும். ஒரு தேர்ந்த சிற்பியிடம் எவ்வாறு இவ்வளவு கலைநயத்துடன் சிற்பங்களை கல்லில் உருவாக்க முடிகிறது என்று கேட்டாராம். அதற்கு அந்த சிற்பி சொன்னாராம் நான் உருவத்தை கல்லில் காண் கின்றேன். அந்தக் கல்லின் தேவையற்ற பகுதிகளை நீக்கி விடுகிறேன். உருவம் வெளிப்பட்டு விடுகிறது என்றாராம்.

இதைப்போலவே வீட்டிலும், அலுவலகத்திலும், வியா பார தொழில் நிலையங்களிலும் தேவையற்றவற்றை நீக்குவோமாக இருந்தாலே அந்த இடத்தில் ஒரு புத்துணர்ச்சியும் தூய்மையும் காணப்படும்.

எனவே, இதனை வெற்றிகரமாகச் செய்வோமாக இருந்தால் ஏனைய நான்கு விதிகளையும் பின்பற்று வது எளிது. என்னிடம் ஆசிரியர் ஒருவர் சொன் னார் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வால் எமக்குக கிடைத்த நன்மை வீட்டி லிருந்த தேவையற்ற பொருட்கள் பல அழிக்கப் பட்டதே என்றார். தேவை யற்ற பழைய துணிகள, பழைய பத்திரிகைகள், புத்தகங்கள், தளபாடங்கள என்பன தமது வீட்டிலி ருந்து அப்புறப்படுத்தப் பட்டதாகச் சொன்னார்.



எனவே தேவையற்றவற்றை நாம் தெளிவாக இனம் கண்டாலே எமக்கு தேவை யானவை தெளிவாகப் புலப்படும்.

இதிலிருந்து இரண்டாம் விதியான தேவையான பொருட்களை அதற்குரிய இடத்தில் வைத்திருந்து பாவித்தல், மூன்றாம் விதியான அவற்றை தூய்மையாக வைத்திருத்தல் நான்காம் விதியான தரப்படுத்தியும், வகைப்படுத்தியும் வைத்திருத்தல். மேலும் ஐந்தாவதான எமக்குத் தேவையான பயிற்சிகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இல்லையேல் வாகனத் திருத்தத்திற்கு போனால் மெக்கானிக் 14 ஆம் நம்பர் சாவியை தேடிக் கொண்டி ருப்பார். வங்கியில் சிவப்புநிற பேனா வைத்த இடம் தெரி யாமல் கிளறிக் கொண்டிருப்பார்கள். அலுவலகத்தில் உரிய கோவை யாரிடம் இருக்கிறது என்பதே தெரியா மல் திண்டாடிக்கொண்டிருப்பார்கள். வீட்டில் உப்புப் போத்தலுக்குப் பதிலாக சீனிப்போத்தலை எடுத்து சீனிக்குழம்பு வைப்பார்கள்.

இதன்மூலம் நேரத்தை வீணடிப்பதுடன், வீணான மன உளைச்சலுக்கும், பதட்டத்திற்கும், அவநம்பிக்கைக் கும் உள்ளாகிறோம். இதன்மூலம் எமது தொழில், வியாபார, குடும்ப ரீதியான உறவுச் சிக்கல்களையம் ஏற்படுத்திக் கொள்கிறோம்.

பொது மலகூடங்கள் அழுக்காக இருப்பதற்கும், சந்தைகளும் பொது இடங்களும் நாறி நசநசப்பதற்கும் இந்த மனப்பாங்கே காரணமாக அமைந்து விடுகிறது. எனவே இந்த ஐந்து விதிகளுள் தேவையற்றவற்றை நீக்குதல் என்ற முதலாவது விதியை நாம் இறுக்கமாக கடைப்பிடித்தாலே அடுத்தடுத்த விதிகளை நாம் இலகுவாக நடைமுறைப்படுத்தி விடலாம். நாம் தயாரா...?

**ஏ.கே.**


# அச்சகத்தினர்கள்

## சிறி லங்கா அச்சகத்தினர்கள் சங்கத்தில் பதிவுசெய்தல்

ஸ்ரீ லங்கா அச்சகத் தொழில்துறையில் ஸ்ரீ லங்கா அச்சகத்தினர் சங்கம் ஒரு பிரதானமான நிறுவனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன் இச் சங்கம் பாராளுமன்றச் சட்டத்தின கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பலவிதமான வழிகளில் நாங்கள் வசதிவாய்ப்புக்களை வழங்கி வரும் அதே வேளையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அச்சகத் தொழில்துறை குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கும் பொருட்டு அச்சு, பொதிசெய்தல் தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு தொடர்ந்து உதவுவதே எமது குறிக்கோளாகும்.

எங்களது பதிவுகளை புதிப்பிக்கும் பொருட்டும் சிறி லங்காவின் அச்சகத் தொழில்துறை சம்பந்தமாக சரியான தகவல்களை திரட்டி வைத்திருக்கும் பொருட்டும் உங்களை எங்களுடன் பதிவுசெய்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப் பதிவுசெய்தல் மூலம் சங்கத்தின் தொழிற்பாடு சம்பந்தமான பொதுவான தகவல்களையும் இத் தொழில்துறைபற்றிய தகவல்களையும் கிரமமான முறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இச் சங்கத்தில் பதிவுசெய்யப்படும் கம்பனி அங்கத்தவர்கள் கீழே காணப்படும் பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

- இத் தொழில்துறையின் கிரமமான முறையில் புதுப்பிக்கப்படும் தரவு களைப் பெற்றுக்கொள்ளலாம்
- சங்கத்தின் எல்லா விதமான வெளியீடுகளையும் சந்தாப்பணமின்றி பெற்றுக்கொள்ளலாம்
- எல்லா சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் பற்றிய தகவல்களை பெறமுடியும்
- வெளிநாட்டிற்கு சங்கத்தினூடாக குழுப்பயணம் சலுகைக் கட்டணத்தில் பயணிக்க இணைந்துகொள்ளலாம்
- சங்கத்தால் வழங்கப்படும் பயிற்சி திட்டங்கள் சலுகை அடிப்படையில் பங்குபற்றலாம்
- அச்சகப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்
- சங்கத்தின் எல்லா சமூக செயற்பாடுகளிலும் பங்குபற்றலாம்
- எல்லாவிதமான சுங்க. இறக்குமதி வரி சம்பந்தமான விடயங்களில் இணக்கப்பாடு ஏற்படுத்தும் உரிமை

அங்கத்துவம்பற்றி மேலதிக தகவல்கள் தேவைப்படின் தயவுசெய்து எங்களது செயலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் தொலைபேசி : 0112 472315
0112 386716

* பூர்த்தி செய்த கூப்பனை கீழே தரப்பட்ட விலாசத்திற்கு அனுப்பவும்

**பதிவு விபரங்கள்**

கம்பனியின் பெயர்: ..........................................
..........................................
உரிமையாளரின் பெயர் : ..........................................
..........................................
விலாசம் : ..........................................
..........................................
மின் அஞ்சல் : ..........................................
தொலைபேசி : ..........................................
கைத்தொலைபேசி: ..........................................

கம்பனி விபரங்கள்
(தயவுசெய்து X இடவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| லெற்றர் பிரஸ் | ஓப் செற் | டிஜிரெல் அச்சு | ஸ்கிறீன் | ரைப்செற்றிங் | பிறி பிறஸ் |

## லொத்தர் சீட்டிழுப்பு

Collate 2012
அச்சகக் கண்காட்சி
24–26 பெப்ரவரி 2012
சிறி லங்கா கண்காட்சி. மாநாடு நிலையம்

தயவுசெய்து நிரப்பிய கூப்பனை கொலற் 2012 கண்காட்சிக்கு எடுத்துவாருங்கள். தரப்பட்ட தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கத்தின் மூலம் அதிர்ஷ்டசாலிகள் அறிவிக்கப்படுவர்

பெயர் : ..........................................
..........................................
கம்பனியின் பெயர் : ..........................................
..........................................
விலாசம்: ..........................................
..........................................
தொடர்பு கொள்ளவேண்டிய இல: : ..........................................
தே.அ.அ. இல : ..........................................




ஏற்பாட்டாளர்கள்
SLAP
இலங்கை அச்சகத்தினர் சங்கம்
இல: 290, டி.ஆர் விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 0094 11 2 472315 / 2 386716
தொலை நகல்: 0094 112 386716
மின் அஞ்சல்: slap@srilankaprint.com
இணையத் தளம்: www.srilankaprint.com

# அமைதிப்படைக்கு சவேந்திர சில்வா; விவகாரம் சூடு பிடிக்கிறது



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான ஆலோசனை வழங்கும் சிறப்புக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டமை தொடர்பில், நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

ஐ.நா.அமைதிப்படைப் பணியகத்துக்கும் சில உறுப்பு நாடுகளின் தூதுவர்களுக்கும் இடையில், சவேந்திர சில்வாவின் நியமனம் குறித்துக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக நியூயோர்க் தகவல்கள் கூறுகின்றன.

இந்தச் சந்திப்பில் பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட சில நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கலந்துரையாடலின் பின்னர், ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் சுசன் ரைஸ் கருத்து வெளியிடுகையில்,

ஆலோசனைக் குழுவில் பணியாற்றத் தெரிவு செய்யப்படும் எவருடையதும் பின்னணி குறித்து அக்கறை கொள்ள வேண்டும். இது குறித்து உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளோம். ஐ.நா.செயலகத்துடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளிப்பது தொடர்பாக பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது பற்றி பகிரங்கமாக விவாதிப்பது பெரும்பாலும் நல்லதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் சவேந்திர சில்வா விவகாரம் குறித்த ஐ.நா. அமைதிப்படை பணியகம், சில நாடுகளின் தூதுவர்களுடன் கலந்துரையாடியமை குறித்துத் தெரிவிக்கையில், தன்னிடம் இவ்விடயம் குறித்துத் தகவல் எதுவும் இல்லை என்று கூறியதுடன், அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான பேச்சாளரிடம் கேட்குமாறு, பான் கி மூனின் பிரதிப் பேச்சாளர் எடுவாடோ டெல் புவே பதிலளித்துள்ளார்.

# உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கிறது

(கொழும்பு)

கடந்த வருட ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் ஜனவரி மாதத்தில் 85 ஆயிரத்து 874 உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என உல்லாசத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் இதே மாதத்தில் 74 ஆயிரத்து 81 உல்லாசப் பயணிகளே வருகை தந்தனர் என்றும், இதன் பிரகாரம் உல்லாசப் பயணிகளின் வருகையில புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

2016 ஆம் ஆண்டில் 2.75 பில்லியன் அமெரிக்க டொலர்களை உல்லாச பயணத்துறை மூலம் பெறுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இதற்காக 25 இலட்சம் உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மேற்கு ஐரோப்பாவிலிருந்து வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 11.9 வீதத்தினால் அதிகரித்துள்ளது. தெற்காசியாவிலிருந்து வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையில் 7.3 வீத அதிகரிப்பு ஏறபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

சிங்கப்பூருக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் குழுவினர், நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

மாலை மூன்று மணியளவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விசேட விமானத்திலேயே ஜனாதிபதியும் குழுவினரும் கட்டுநாயக்காவை வந்தடைந்ததாக மேலும் தெரிய வருகிறது.

# கட்டண அதிகரிப்பு வேண்டும்; கோரிக்கை வலுவடைகிறது

(கொழும்பு)

பேருந்துக் கட்டண மீளாய்வின் போது பேருந்துக் கட்டண அதிகரிப்போ அல்லது நிவாரணமோ அத்தியாவசியமானது என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

குருநாகலவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே சம்மேளனத்தின் தலைவர் ரூபன் சில்வா இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் டீசல் விலை அதிகரிப்பின் போது வழங்கப்பட வேண்டியிருந்த 8 ரூபாய் கட்டண அதிகரிப்பும், எரிபொருள் மானியமும் வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, அகில இலங்கை தனியார் பேருந்து நிறுவனங்களின் சம்மேளன செயலாளர் அஞ்சன பிரியஞ்சித், எதிர்வரும காலங்களில் டீசல் விலையில், அதிகரிப்பு ஏற்பட்டால் அதன் போது, நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் முறைமையை இப்போதிருந்தே தயாரிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## பிறந்த ஊரைப் பார்க்க துடிக்கும் தமிழ்ச் சிறுமி



"எங்கட ஊரைப் பார்க்க வேணடும் போல உள்ளது" என்று விஜய தொலைக்காட்சியில் கலங்கிய கண்களுடன் கனடா வாழ் இலங்கைத் தமிழ்ச் சிறுமி சாரிகா மனம் திறந்து பேசியுள்ளார்.

தென்னிந்தியத் தொலைக்காட்சியான விஜய் டி.வி.யில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏடெல் சூப்பர் சிங்கர் - 3 நிகழ்ச்சியில் கனடா வாழ் இலங்கைத் தமிழ்ச் சிறுமியும் பங்குபற்றி எல்லோர் மனதையும் கொள்ளைகொண்டுள்ளார்.

பல மாதங்களாக விஜய் டி.வியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சூப்பர் சிங்கர் பாட்டுப்போட்டியில் இச்சிறுமி கனடாவில் இருந்து குடும்பமாகச் சென்று கலந்து கொண்டுள்ளார்.

அவர் தனது பாட்டுத் திறமையால் மட்டுமல்ல, ஊரையும் நினைவு கூர்ந்து, தமிழர்களின் இன்னல்களைக் கூறி, எல்லோர் மனதிலும் இடம்பிடித்துள்ளார். சாரிகா தனது திறமையால் சூப்பர் சிங்கர் போட்டியில் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# யுத்தவெற்றி தனியொருவருக்குச் சொந்தம் அல்ல அனைவருக்கும் அனுகூலம் என்கிறார் கோத்தாபய

(கொழும்பு)

யுத்தத்தின் வெற்றி தனியொருவருக்கு மட்டுமானது அல்ல. அதன் அனுகூலங்கள் நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தமானது.

பாதுகாப்புத் தரப்பினர் பெற்றுக்கொண்ட யுத்தத்தை முறியடித்த அனுகூலங்களை நாட்டில் அனைத்துத் தரப்பினருக்கும் தற்போது கிடைத்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, இதனை அவர் குறிப்பிட்டார்.




தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பயன்கள் பொது மககளுக்கு கிடைத்துள்ளன. தமிழ, சிங்களம், முஸ்லிம் என அனைத்துத் தரப்பிலும், அம்பாறை போன்ற பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு யுத்த வெற்றியின் நன்மை கிடைத்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

# படைச்சிப்பாயின் கொள்ளை முயற்சி குருநாகல் பொலிஸார் முறியடித்தனர்

(கொழும்பு)

குருநாகல் மக்கள் வங்கிக் கிளையியின் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திரத்திலிருந்து (ஏ.ரி.எம்.) பணத்தைக் கொள்ளையடிக்க முயற்சித்தார் எனும் குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

22 வயதான வயதான இச்சிப்பாய் கெமனுவோச் படைப் பிரிவைச் சேர்ந்தவர். யாழ்.நாவற்குளம் முகாமில் கடமையாற்றும் இவர் விடுமுறையில் சென்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அலாரம் அடித்ததையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அப்போது சந்தேக நபர் அங்கிருந்து தப்பியோடி குருநாகல் பொதுநூலக மைதானத்தில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி கிளையின் தன்னியக்க இயந்திரங்களில் அவ்வேளையில் 15 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விலை அதிகரிப்பு பால்மா வகைகளுக்கும்

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பால் மா வகைகளின் விலைகளும் கணிசமாக அதிகரிக்கும் வாய்ப்பு தோன்றியுள்ளது. பால்மாவின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு அரசாங்கத்திடம் பால் மா விநியோக நிறுவனங்கள் அனுமதிகோரியுள்ளன.


இந்த அனுமதி வழங்கப்பட்டால் 400 கிராம் பால்மாவின் விலை 15 ரூபாவினால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கர், நெஸ்பிறே, மெலிபன, டயமன்ட் முதலான வர்த்தகப் பெயர்கள் கொண்ட பால்மாவை விநியோகிக்கும் நிறுவனங்கள், இறக்குமதி, உற்பத்தி, விநியோகச் செலவுகளைக் காரணம் காட்டி, விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விலைகள் அதிகரிக்கப்படாவிட்டால் தமது தொழிற்துறை நெருக்கடியை எதிர்நோக்கும் எனத் தெரிவித்துள்ளதுடன், இது குறித்து வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் அவகாசத்தையும் இந் நிறுவனங்கள் கோரியுள்ளன்.

2012 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூபாவின் மதிப்பை 3 சதவீதத்தால் குறைத்தமையானது, பால்மா இறக்குமதியில் எதிர்மாறான தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி 120 ரூபாவாக வீழ்ச்சியடைந்ததால் இந்நிலைமை மிகமோசமடைந்ததாகவும் அந்நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.



சிங்கள மொழிமூலம் குர்ஆனின் விளக்கவுரை நூல் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் டி.எம்.ஜயரட்ண நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் பாருக் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டதைக் காணலாம்.

# வடக்கில் பனைவள அபிவிருத்தி இந்திய உதவியுடன் பயிற்சி



(கொழும்பு)

இந்திய அரசின் உதவியுடன் பனை வள அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வழங்கும் செயற்றிட்டத்தை வடக்கில் அமுல்படுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள பனை அபிவிருத்திச் சபைக்குரிய பனைவள ஆராய்ச்சி நிலையமானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைவாக மீளக்கட்டியமைக்கப்பட்டுள்ளது. அதன் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பிலான விரிவான கலந்துரையாடலொன்று கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மீள்கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள யாழ்.கைதடியிலுள்ள மேற்படி கட்டடத்திற்கான இயந்திரங்கள், தளபாடங்கள், வாகனங்கள் உட்பட ஏனைய அனைத்து வசதிகளும் எதிர்வரும் மே மாதத்தில் இந்திய நிதி உதவியின் மூலம் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய சென்னை மற்றும் கேரளா, திருவனந்தபுரத்தில் அமையப்பெற்றுள்ள பனைவள ஆராய்ச்சி நிறுவனங்களில் தமிழக விவசாய பல்கலைக்கழகத்துடன் இணைந்த பனைவள அபிவிருத்தி சார்ந்த பயிற்சிகளை எமது நாட்டவர்களுக்கு வழங்க இந்தியா முன்வந்துள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.


அதுமட்டுமல்லாமல் இயந்திராதிகள் கொண்டுவரப்பட்டு பொருத்தப்படுவதுடன் அது சார்ந்த இயக்கும் அடிப்படை பயிற்சிகளும் இந்தியத் தொழிலநுட்பவியலாளர்களால் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய திறமை அடிப்படையில் முன்னுரிமை வழங்கி உரிய நபர்களை தெரிவு செய்ய வேண்டுமென அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

அதேநேரம் இதுவரையில் அநேகமாக பனை விதைகளே நாட்டப்பட்டு வந்தன. அவை போதிய பயன்தருவதில்லை என்பதால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய பனை விதை நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நாற்று மேடைகளில் பதியம் செய்யப்பட்ட ஒரு இலட்சம் பனங்கன்றுகளை இவ்வருடம் நடுவதற்கான ஏற்பாடுகள் பனை அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் பனை வளம் செழித்து வளரும் பகுதிகளில் அரச காணிகளில் பனந்தோப்புகளை உருவாக்கும் அதேநேரம் இத்தோப்புகளில் ஊடுபயிர்களை இனங்கண்டு அவற்றைப் பயிரிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

# நாமல் ராஜபக்ஷ தலைமையில் பலஸ்தீனத்துக்கு உயர் குழு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ மற்றும் பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளடங்கிய அரச உயர் மட்ட தூதுக்குழுவொன்று நேற்றுச் சனிக்கிழமை மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பலஸ்தீனத்திற்குச் சென்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பலஸ்தீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இத்தூதுக்குழுவினர் பலஸ்தீனத்திற்கு விஜயம் மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராகவே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பலஸ்தீன் விஜயம் மேற்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, விஞ்ஞான தொழில்நுட்ப பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன புஷ்பகுமார மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரத்ன அமுனுகம ஆகியோரும் இக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் அழைப்பின் பேரில் இலங்கை நாடாளுமன்ற குழுவொன்று கடந்த ஜனவரி 29ஆம் திகதி இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசை கடுமையாகச் சாடுகிறது லங்கா சமசமாஜக் கட்சி

## எரிபொருள், விலை உயர்வின் எதிரொலி

(கொழும்பு)

என்றுமில்லாத வகையில் எரிபொருட்களின் விலையை அரசு சடுதியாக உயர்த்தியமை தொடர்பாக லங்கா சமசமாஜக் கட்சி அரசு மீது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லங்கா சமசமாஜக் கட்சியின் உதவிச் செயலாளர், அனில் சொய்ஸா கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவே எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன், இலங்கை ரூபாவின் பெறுமதி குறைப்பும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகப் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது எரிபொருட்களின் விலைகளை மேலும் உயர்த்த வேண்டிய நிலை உள்ளது. எனினும், தற்போது எரிபொருளின் விலையை உயர்த்தியதன் காரணமாக அரசாங்கத்தின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சொய்ஸா சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய சிலாபத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கொல்லப்பட்டமையையும் லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளர் கண்டித்துள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் அதன் தலைவரான திஸ்ஸ விதாரண, அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சராக பதவி வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நெல் விநியோகத்தில் மோசடி; பிரதேச சபை உறுப்பினர் சிறையில்

(கொழும்பு)

அரசாங்கத்திற்குச் சொந்தமான நெற் களஞ்சியசாலையில் இருந்து சட்டவிரோதமாக நெல்லை விநியோகித்த சந்தேகத்தின் பேரில் எலஹெர பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப பட்டுள்ளார்.

நெல் விநியோக சபைக்குச் சொந்தமான களஞ்சியசாலையிலுள்ள நெல்லை தனியார் வர்த்தகர் ஒருவருக்கு குறித்த நபர் விநியோகித்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

நெல்லை விநியோகிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# பதில் நீதவானின் காணிக்கு ஆப்பு; போலி ஆவணம் தயாரித்து விற்பனை

(கொழும்பு)

நீதவான் ஒருவரின் காணி போலி ஆவணங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கல்கிசைப் பதில் நீதவான் ஒருவருக்குச் சொந்தமான 74 பர்சஸ் காணி இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது. போலியான காணி உறுதி தயாரிக்கப்பட்டு ஒரு கோடி ரூபாவிற்கு இந்தக் காணி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் மகிந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

கண்டி-லேவெல்ல பகுதியில் காணப்படும் காணி ஒன்றே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் இதற்கு முன்னர் போலிக் காணி உறுதிகளைத் தயாரித்துக் காணிகளை விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் விசேட செயலணி டெங்கு ஒழிப்பில் பணியாற்றும்

(வவுனியா)

வவுனியாவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் விசேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

இச்செயலணியின் விசேட கூட்டம் நேற்று வவுனியா கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம் வவுனியா பிரதேச செயலாளர் சிவபாதசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வவுனியா நகரை அண்டிய பகுதிகளைச் சுத்தம் செய்வதுடன் டெங்கு பரவக்கூடிய இடங்களை இல்லாதொழிப்பதுடன் தமது இடங்களைச் சுத்தமாக வைத்திருக்கத் தவறுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(125)

# மக்களின் அவலங்களைப் புரிந்துகொள்ளாத அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடரும்

(கொழும்பு)


மக்களின் அவலங்களைப் புரிந்து கொள்ள முடியாத அரசுக்குப் போராட்டங்களின் மூலமாகவே அவற்றைப் புரியவைக்க முடியும். எனவே அரசுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மக்களுக்காக நடத்திய போராட்டத்தின் மீது அரசாங்கம் தாக்குதல் நடத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். அரசின் இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

மக்களின் அவலங்களைப் புரிந்துகொள்ள முடியாத அரசாங்கத்திற்குப் போராட்டங்களின் மூலமே அவற்றைத் தெளிவுபடுத்த முடியும். மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் வரையில் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தப்படும்.

எதிர்க்கட்சிகளினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் மிகவும் அமைதியான முறையில் நடத்தப்பட்டது.

அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. எரிபொருளுக்கான விலை மிகவும் அநீதியான முறையில் உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் அசராங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.



கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் உருவச்சிலை நேற்றுக் காலை 10.30 மணியளவில் வவுனியா குட்செட் வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (125)




# ஆளப்போகும் அண்ரோயிட்

கணினி என்றவுடனேயே நினைவில் வருவது பில்கேட்சின் மைக்ரோசொப்ட் நிறுவன தயாரிப்பான விண்டோஸ் இயங்கு தளம்தான். மென்பொருள்களாகட்டும், வீடியோ கேம்ஸ் ஆகட்டும், இணையத் தளங்களாகட்டும் அனைத்திற்கும் இயஙகு தளமாக விளங்குவது விண்டோஸ்தான். யுனிக்ஸ், மாக் போன்ற இயங்குதளங் கள் இருப்பினும் புதிதாக உருவாக்கப் படும் மென்பொருள்களில் பெரும்பாலா னவை விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படும் வகையில்தான் வடிவமைக் கப்படுகின்றன.

எனவேதான் மைக்ரோசொப்ட் நிறு வனத்தின் வளர்ச்சி அபரிமிதமாக உள் ளது. கணினிக்கு எப்படி ஓர் இயங்குதளம் தேவையோ, அதுபோல கைப்பேசிக ளுக்கு ஓர் இயங்குதளம் தேவை. தற்போது கைப்பேசி என்றவுடனேயே நினைவில் வரும் வகையில் உள்ளது கூகுள் நிறு வனததின் அண்ரோயிட் இயங்குதளம்தான்.

நொக்கியா கைப்பேசிகளுக்கென தனி இயங்குதளம் உள்ளது. இதுபோல அப்பிள் நிறுவன தொலைபேசிகளுக் கென தனி இயங்குதளம் உள்ளது ஆனால் சம்சுங் உள்ளிட்ட பெரும்பாலான கைப் பேசிகள் அண்ரோயிட் இயங்குதளத் தையே நம்பியுள்ளன.

இந்த அண்ரோயிட் இயங்குதளத்தை முதன் முதலில் அண்ரோயிட் இன் கோப்ப ரேஷன் என்ற நிறுவனம் உருவாக்கியது. இந்நிறுவனத்தை 2005 இல் கூகுள் நிறுவனம் வாங்கியது. அதன் பின்னர் 2007 இல் மோட்டரோலா, சம்சுங், எல்ஜி, டிமொபைல், எச்.டி.சி, ப்ரோட்கொம் கோப்பரேஷன், இண்டெல், என்வீடியா, குவால் கொம் மற்றும் பல முன்னணி நிறுவனங்களுடன் கூட்டணி அமைத்த தன் மூலம் அண்ரோயிட் இயங்குதளம் மேலும் மெருகேற்றப்பட்டது.




இந்த இயங்குதளத்தில், தங்களுக் குத் தேவையான சிறு சிறு மென் பொருள்களை உருவாக்கி இணைத்துக் கொள்ள முடியும். இந்த வகையில் இன்று கைப்பேசிகளில் பன்படுத்தத்தக்க ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடியோ கேம்ஸ உட்பட மென்பொருள்கள் அண்ரோயிட் இயங்குதளத்தையே பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன.

கைப்பேசிகளில் குறிப்பிட்ட இடத்திற் கான வரைபடத்தை காண்பிக்கும் பெண் "உங்களிடம் இல்லையா அங்கிள்" என காரில் வருபவரிடம் கூறுவதாக அமைந்த தொலைக்காட்சி விளம்பரத்தில் அண் ரோயிட் பயன்பாடு இல்லாத கைப் பேசிகளை உபயோகிப்போர்கள் பல ஆண்டுகள் பின்னோக்கி இருப்பவர்க ளாகவே காட்டப்படுகிறது.

அதுபோல கோபமான அதிகாரி, உதிர்க் கும் வார்த்தைகளை அப்படியே திரும்பப் பேசுகிறது பூனை. இதைக் கேட்ட அதி காரி கோபம் பறந்து சிரிக்கிறார். இது போன்ற விளம்பரங்களாலும் அண்ரோயிட் பதிந்த கைப்பேசிகளை வாங்குவதில் வாடிக்கையாளர்கள் ஆவலாக இருக் கின்றனர். ஐபோனிற்கு இணையான அம்சங்களோடு, விலை குறைவாக இருப்பது இதன் விற்பனை அதிகரிப் பிற்கு முக்கிய காரணமாகும்.

மேற்படி வரைபடங்கள், பேசும் பூனை போன்ற மேலும் புதுமைகளைப் படைக்க வேண்டும் என விரும்புவோர்க்கு நிரல் கள் எழுத ஏற்ற வகையில் உள்ளதுதான் அண்ரோயிட்டின் சிறப்பு.

தற்போது மடிக்கணினிகளுக்கு மாற் றாக டேபிள் பிசி எனப்படும் சிறிய வகை கணினிகளுக்கு வரவேற்பு அதிகமாக உள்ளது. இந்தக் கணினிகளிலும் அண் ரோயிட்களே இயங்குதளமாக உள்ளன.

எனவே வரும் காலத்தில் அண் ரோயிட் இயங்குதளத்தைப் பயன்படுத்தி புதிய மென்பொருள்களை உருவாக்க வும், அவுட் சோர்ஸிங் முறையில் வீடியோ கேம்ஸ், கைப்பேசியில் பயன்படுத்தத் தக்க வகையிலான மென்பொருள் களைத் தயாரித்து விற்கவும் வாய்ப்பு கள் உள்ளன. எனவே, விண்டோஸுக்கு மாற்றாக அண்ரோயிட் ஆளும் காலம் விரைவிலே வரவுள்ளது.

# தனியாக ஒரு User Account



உங்கள் குழந்தைகளும் மற்றவர்களும் பயன் படுத்துவதற்கென்று உங்கள் கணினியில் ஒரு User Account தனியே உருவாக்கிக் கொள்ளலாம்.

முதலில் Start கிளிக் செய்து பின் Control Panel தேர்ந்தெடுக்கவும். இதில் User Accounts என்ற பிரிவில் கிளிக் செய்திடவும். விண்டோவில் Create a New Account என்று இருப்பதில் கிளிக் செய்க. இதில் விஸார்ட் உங்களை புது அக்கவுண்ட்டுக்கான பெயரைக் கேட்கும். நீங்கள் விரும்பும் வகையில், அடையாளம் காட்டும் வகையில் பெயர் கொடுக்கலாம். அதன் பின எந்தவித டைப்பாக இருக்க வேண்டும் என கேட்கப் படும். குறைந்த அளவே சுதந்திரம் கொடுப்பது உங்கள் குறிக்கோள் என்பதால் Limited User என்பதைத் தேர்ந்தெடுக்கவும். அதன் பின் Create Account என்பதில் கிளிக் செய்தால் Account உருவாக்கப்படும். இதிலிருந்து அந்த யூசர் கணினிக்குள் நுழையலாம். அவருடைய பாஸ்வேர்ட் அல்லது அவர் உருவாக்கும் பைல்களை மாற்றலாம். இவ்வாறே கணினியை திருத்தும் கடைக்கு எடுத்துச் செல்கையிலும், இதே போன்று ஒரு அக்கவுண்ட்டை உருவாக்கி எடுத்துச் சென்று அவர்கள் கம்ப்யூட்டரில் நுழைந்து பார்க்க அந்த அக்கவுண்ட்டைப் பயன்படுத்தச் சொல்லலாம்.

# கூகுள், யாஹூ தவிர...

இணையதளத்தில் தகவல்களைத் தேட அனேக மாக எல்லோரும் கூகுள் தான் பயன்படுத்துகின்றனர். யாஹூ தளம் பயன்படுத்துவோர் இணைந்துள்ள தேடல் இஞ்சினைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், தகவல் களைத் தேடிப் பெற இவை மட்டுமல்ல வேறு தளங் களும் நிறைய இருக்கின்றன. இவற்றையும் பயன் படுத்திப் பார்க்கலாம். நாம் அறிந்த வகையில் கீழே காட்டப்பட்டுள்ளவை சிறப்பாக இயங்குகின்றன. பெயர்களும் முகவரிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

AltaVista - http://www.altavista.digital.com
Excite - http://www.excite.com
GoTo - http://www.goto.com
HotBot - http://www.hotbot.com
InfoSeek - http://www.infoseek.com
Northern Light - http://www.northernlight.com
Lycos - http://www.lycos.com
WebCrawler - http://www.webcrawler.com

# கூகுள் - யு-ட்யூப் சாதனை!




வீடியோ காட்சிகளுக்கென கூகுள், ஏற் கனவே இயங்கி வந்த யு-ட்யூப் தளத்தினை வாங்கிச் செம்மைப்படுத்தி, அடிக்கடி அதனை மேம்படுத்தும் செயலில் இறங்கியது. வாடிக் கையாளர்கள் தங்களின் வீடியோ பைல் களை அப்லோட் செய்திடவும், வீடியோ காட்சிகளைப் பார்க்க விரும்புபவர்கள், தேடிக் கண்டறிந்து காணவும் பல வசதிக ளையும் தேடல் பிரிவுக ளையும் தந்துள்ளது.

இந்த இமாலய சாதனை இப்போது பல புதிய சிகரங்களை எட்டியுள்ளது. தினமும் இந்த தளத்தில் 400 கோடி வீடியோ காட்சிகள் பார்க்கப்படுகின்றன. ஒவ்வொரு நிமிடத்திலும் சராசரியாக 60 மணி நேர வீடியோ காட்சிகள் பைல்களாக அப்லோட் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு விநாடியிலும் ஒரு மணி நேர வீடியோ காட்சி அப்லோட் செய்யப்படுகிறது. அதாவது ஒவ்வொரு 24 விநாடிகளிலும் 24 மணிநேர வீடியோ மேலேற்றம் செய்யப்படுகிறது. இது தொடர்ந்து 25 வீதம் அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம், கூகுள் அனைத்துப் பிரிவுகளிலும், நல்ல, தரமான வீடியோ காட்சிகளை அனுமதிப்பதுதான். கூகுள் இதனைக் கொண்டாடும் வகையில் தனியே தளம் ஒன்றை www.onehourpersecond.com என்ற முகவரியில் அமைத்துள்ளது. இங்கு சென்றால், இனிய இசை மற்றும் கேலிச் சித்திரங்களுடன் கூகுளின் சாதனை யைப் பல வழிகளில் ஒப்பிட்டுக் கண்டு ரசிக்கலாம்.

# தெரிந்து கொள்வோம்!


- டொகுமெண்ட் ஒன்றை நண்பருக்கு ஈமெயிலில் அனுப்புகையில் அதனுடன் Font ஒன்றையும் அனுப்ப முடிவு செய்கிறீர்கள். பெரும்பாலும் தமிழில் அமைக்கப் பட்ட டொகுமெண்ட்களுடன் இது போல Font அனுப்பப் படுவதனைப் பார்க்கலாம். இந்த Font ஐ எப்படி ஈமெயிலில் இணைத்து அனுப்புவது? எந்த எழுத்து வகையையும் Font போல்டரிலிருந்து நேரடியாக ஈமெயில் Attached பைலாக அனுப்ப முடியாது. எனவே அதனை வேறு ஒரு ட்ரைவ் அல்லது போல்டருக்குக் கொப்பி செய்து பின்னரே அட்டாச் செய்து அனுப்ப முடியும்.
- எம்.எஸ். அவுட்லுக்கில் e-mail அல்லது appointment ஒனறை மூடுவதற்கு Ctrl + F4 பயன்படுத்திப் பாருங்கள். செயற்படாது. ஏனென்றால் அவுட்லுக் மட்டும் திறந்திருக்கும் ஒன்றை மூடுவதற்கு Alt + F4 கீகளைப் பயன்படுத்தும். இதனைப் பயன்படுத்தி திறந்திருக்கும் பைலை மூடிவிட்டீர்களா! இப்போது மீண்டும் Alt + F4 பயன்படுததுங்கள். புரோகிராம் மூடப்படும். எனவே அவுட்லுக் புரோகிராமினை மூட வேண்டும் என்றால் அதில் திறந்திருக்கும் ஒவ்வொன்றையும் முதலில் Alt + F4 பயன்படுத்தி மூடிவிட்டு இறுதியாகவும் அதனைப் பயன்படுத்தினாலே புரோகிராம் மூடப்படும்.
- Notepad இல் டெக்ஸ்ட் அமைக்கையில் அன்றைய திகதி மற்றும் கிழமையை அமைத்திடும் Shortcut key F5 ஆகும்.
- நேரத்தை சரியாக மாற்றி வைத்தாலும் ஒவ்வொரு முறை கம்ப்யூட்டரை பூட் செய்திடும் போதும் நேரம் தவறாக மாறியிருக்குமானால், கம்ப்யூட்டரில் உள்ள சீமோஸ் பற்றரி செயல் இழந்துவிட்டது என்று அர்த்தம். கம்ப்யூட்டரை மூடிய பிறகும், இது போன்ற இயக்கங்களுக் கென கம்ப்யூட்டரின் மதர்போர்டில், சிறிய வட்ட வடிவிலான சீமோஸ் பற்றரி இருக்கும். நீங்கள் செற் பண்ணி வைத்திருக்கும் நேரம் மற்றும் திகதி, கம்ப்யூட்டரை மூடினாலும் தொடர்ந்து அப்படியே இருக்க சிறிய அளவில் மின்சக்தி தேவை. அதனை இந்த பற்றரி தான் தருகிறது. இது காலாவதியாகி, செயல் இழந்து விட்டால் நேரம் திக தியை கம்ப்யூட்டர் தவறாகக் காட்டும்.

இதனை மாற்றினால் சரியாகி விடும். சிபியுவினைக் கழற்றி இதனை நீங்களே கவனமாக மாற்றிவிடலாம்.

# இணையத்தில் Unzip

உங்கள் கணினியில் விண்ஸிப், விண் ஆர்.ஏ.ஆர் போன்றவை இல்லாவிடினும் கவலை இல்லை. சுருக்கப்பட்ட பைல் என்ன வகை யானதாக இருந்தாலும் விரித்துப் பெற இணையத்தில் வழி உள்ளது.

http://www.wobzip.org/ என்ற முகவரியில் உள்ள இந்த தளத்திற்குச் செல்லுங்கள். அன்ஸிப் செய்திட வேண்டிய, விரித்துப் பார்க்கவேண்டிய அந்த சுருக்கப்பட்டிருக்கும் பைலை அப்லோட் செய்திடுங் கள். இந்தத்தளம் அந்த ஸிப் பைலை விரித்து, என்ன என்ன பைல்கள் அதில் உள்ளன என்று காட்டும். நீங்கள் அவற்றை ஒவ வொன்றாகவோ அலலது மொத்தமாகவோ டவுண்லோட் செய்திடலாம். இத்தளம் பலவகை யான ஸிப் பைல்களைக் கையாளும் திறன்கொண்டதாக உள்ளது. அவை — 7z, ZIP, GZIP, BZIP2, TAR, RAR, CAB, ISO, ARJ, LZHCHM, Z, CPIO, RPM, DEB மற்றும் NSIS ஆகும். இதில் அப்லோட் செய்யப்படும் ஸிப் பைல் 100 எம்பிக்கு மேல் இருக்கக் கூடாது.



# ஊரெழு கணேசா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி




யாழ்ப்பாணம் ஊரெழு கணேசா வித்தியாலயத்தின் 2012ஆம் ஆண்டுக்கான இல்லமெய் வல்லுநர் போட்டி கடந்த புதன் கிழமை பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் வலி. கிழககு பிரதேச ஒருங்கிணைப் புக் குழுத் தலைவருமான சில் வெஸதிரி அலென்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகவும், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம் சிறப்பு விருந் தினராகவும், வலி. கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் இராமநாதன் ஐங்கரன் மறறும் வலய உடற்கல்வி ஆசிரியர் வ.செந்தூரன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இந்த விளையாட்டுப் போட்டியல் கம்பன், இளங்கோ, வள்ளுவர் ஆகிய 03 இல்லங்கள் போட்டி போட்டன.

இங்கு உரையாற்றிய வலி. கிழக்குப் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் இ.ஐங்கரன், இந்தப் பாடசாலை பின் தங்கிய கிராமத்தில் இருந்தாலும் மாணவர்கள் ஆர்வத்தோடும், உறசாகத் தோடும் செயற்படுவதை காணக்கூடியதாக வுள்ளதாகவும், பாடசாலைக்குத் தற்போது தேவைப்படும் 2 மாடிக் கட்டடம் ஒன்றினை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் பெற்றுக் கொடுப்பதாகவும் கூறினார்.

இதன்போது,பாடசாலைக்கான பான்ட் வாத்தியக் கருவிகளை யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுபபினர் சில்வெஸ்திரி அலென்ரின பெற்றுக் கொடுபப தாக உறுதியளிததார். விளையாட்டுப் போட்டியின் இறுதியில் கம்பன் இல்லம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. (135)



யா/மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டியின்போது பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் ஐ.மனோகரன் உரையாற்றுகிறார். அருகில் அதிபர் இரா.ஜெயக்குமார் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், பெற்றோர்கள் காணப்படுகின்றனர். (44)

# மாலைநேர வீதி ஓட்டம்

(நல்லூர்)

நல்லூர் மங்கையற் கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியின் முன்னோடி நிகழ்ச்சியாக 5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட மாலை நேர வீதி ஓட்டப்போட்டி இன்று மாலை 5 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ். கல்வி வலய உடற் கலவிப் பணிப்பாளர் சண்தயாளன் போட்டியைத் தொடக்கி வைப் பார்.



சுண்டுக்குழி மகளிர் கல்லூரி இல்லமெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொமர்ஷல் வங்கி முகாமையாளர் ராஜநிதி ஜெயசிங்க முதலிடம் பெற்ற இல்லத்துக்கான வெற்றிக் கேடயத்தை வழங்குவதைக் காணலாம். (20)

# இல்லமெய்வல்லுநர் போட்டிகள்

கனகரத்தின மத்திய மகாவித்தியால இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கனகநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக தர்ம குலசிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

● ● ●

புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் இ.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜ மூர்த்தி பிரதம விருந்தினராகவும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இதிலீபன் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு 68 ஆவது டிவிசன் கொமாண்டர் பிரிகேடியர் கே.ஜெ.விஜயதிலக மற்றும் முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச.கனகரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (138)

விளையாட்டு செய்திகள்

# வாய்ப்பை இழந்தது இலங்கை

2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை அம்பாந்தோட்டை இழந்துள்ளது. மேற்கிந்தியத் தீவு - சென் கீட்ஸ் மெரியட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரம் தகுதி பெற்றுள்ளது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை 2018ஆம் ஆண்டு நடத்த இலங்கையின் அம்பாந்தோட்டை மற்றும் அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரம் ஆகியன போட்டியிட்டன.

71 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொண்ட நிலையில் அவுஸ்ரேலியாவிற்கு 43 வாக்குகளும் இலங்கைக்கு 27 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன்படி 2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை அவுஸ்ரேலியா பெற்றது.

# கிரிக்கெட் வீரர்களுக்கு சம்பளம்; இலங்கை வங்கி 600 மில்லியன் நிதியுதவி

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் எதிர்கால கிரிக்கெட் தொடர் செலவுகளுக்கு இலங்கை வங்கி 600 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே இலங்கை வங்கிப் பணிப்பாளர் குழுவுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் விளைவாக இந்த நிதியுதவி கிடைத்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் காணப்படும் நிதிப் பற்றாக்குறையால் கடந்த காலங்களில் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

வீரர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவையை பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு இலஙகை கிரிக்கெட் நிறுவனத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் 2012 - 2019ஆம் ஆண்டு தொடர்கள் மூலம் 139 மில்லியன் அமெரிகக டொலர் இலங்கைக்கு கிடைக்கும் எனவும் அதனால் எதிர் காலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு சிக்கல் ஏற்படாது எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் வீரர்களின் மார்ச் மாதச் சம்பளத்தையும் உரியவாறு வழங்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# 6 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி



தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டி20 கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென் ஆபிரிக்க அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 3 டி20, 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் 20-20 கிரிக்கெட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனையடுத்து தென் ஆபிரிககா அணி துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ரிச்சர்டு லெவி 13 ஓட்டங்களும், ஹாசிம் ஆம்லா 19 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து களமிறங்கிய ஜஸ்டின் ஆன்டாங் 32 ஓட்டங்களும், ஜே.பி. டுமினி 41 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் தென் ஆபிரிக்க அணி 6 விக்கெட் இழப்பிற்கு 147 ஓட்டங்கள் எடுத்தது.

இறுதியில் 19.2 ஓவரில 4 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் எடுத்து நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய மார்டின் குபதில் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# முத்தரப்பு தொடர் சேவாக் இன்று ஓய்வு

முத்தரப்பு தொடரின் இன்றைய போட்டியில் இந்திய அணியின் தொடக்க வீரர் விரேந்திர சேவாக்கிற்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இந்தியா, இலங்கை, அவுஸ்ரேலியா அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இந்த முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் ஏழாவது லீக் ஆட்டம் இந்தியா, அவுஸ்ரேலியா அணிகளுக்கு இடையே இன்று நடைபெறவிருக்கிறது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் தொடக்க துடுப்பாட்டக்காரர் வீரேந்திர சேவாக்கிற்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. அதனால், தொடக்க வீரர்களாக சச்சின் டெண்டுல்கர், கவுதம் காம்பீர் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று, தொடக்கவீரராக சச்சின் களமிறங்க இருப்பதன் மூலம், சத சாதனையை இந்தப் போட்டியில் நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைக்க ஜெயலலிதா உட்பட 8 முதல்வர்கள் எதிர்ப்பு!



(புதுடில்லி) தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. எதிர் வரும் மார்ச் 1ஆம் திகதி முதல் இந்த மையம் செயற்பட உள்ளது. மாநில அரசுகளின் அனுமதி இல்லாமல் எங்கு வேண்டுமானாலும் தேடுதல் நடத்தவும், யாரை வேண்டுமானாலும் கைது செய்யவும் இந்த மையத்தின் அதிகாரி களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் எடுககப்பட்ட இந்த தன்னிச்சையான முடிவை மத்திய அரசு மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று தமிழக முதல் வர் ஜெயலலிதா உட்பட 8 மாநில முதல்வர்கள் கோரியுள்ளனர்.

தீவிரவாத செயல்களைத் தடுப்பதற்குத் தேசிய தீவிரவாத தடுபபு மையம் அமைக்க மத்திய அரசு கடந்த 3ஆம் திகதி முடிவு செய்தது. தீவிரவாத அச்சுறுத்தல் தொடர்பாக நாடு முழுவதும் இருந்து கிடைக்கும் தகவல்களை ஒருங்கிணைத்து ஆய்வு செய்யும் பணியை இந்த மையம் மேற்கொள்ளும். இதற்காக, தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சம்பந்தப்பட்ட மாநிலங்களிடம் அனுமதி பெறாமல் தேடுதல் நடத்தவும், சந்தேகப்படுபவர்களைக் கைது செய்யவும் அந்த மையத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய மையம் மார்ச் 1ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த திடீர் முடிவு, மாநிலங்களின் அதிகாரத்தில் தலையிடும் செயலாகும் என்று 8 மாநில முதல்வர்கள் கண்டனம் தெரிவிததுள்ளனர.

இந்த விவகாரத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் மம்தா பானர்ஜி (மேற்கு வங்காளம்), நரேந்திர மோடி (குஜராத்), நவீன் பட்நாயக் (ஒரிசா), நிதிஷ் குமார்(பீகார்), பிரகாஷ் சிங் பாதல்(பஞ்சாப்), சிவராஜ்சிங் சவுகான் (மத்திய பிரதேசம்), பிரேம்குமார் துமல் (இமாச்சல்) ஆகிய முதல்வர்களும் மத்திய அரசுக்குத் தங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் அனுப்பி உள்ள கடிதத்தில் கூறி யிருப்பதாவது;

சட்டம் ஒழுங்கு பாதுகாப்பது மாநிலங்களின் கடமை. இது மாநிலங்களின் அதிகார வரம்புக்குள் வருகிறது. ஆனால், தலையிடும் வகையில் தேசிய தீவிரவாத தடுப்பு மையம் தொடங்க மத்திய அரசு தன்னிச்சையாக முடிவு செய்துள்ளது.

மாநிலங்களின் ஆதரவைப் பெறாமல் இப்படி ஒரு முடிவை எடுத்தது சரியல்ல. இது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## கவிஞர் தாமரைக்கு பாடல் எழுதும் வாய்ப்பு



இளையராஜாவின் இசையில் முதல் முறையாக பாடல் எழுதும் வாய்ப்பைப் பெற்றுள்ளார் கவிஞர் தாமரை.

கவுதம் மேனனின் அணியில் எப்போதும் தாமரைக்கு இடமுண்டு. அவரது முதல் படமான மின்னலேயிலிருந்து பாடல் எழுதுகிறார் தாமரை.

இப்போது கவுதம் மேனன் இயக்கும் 'நீதானே என் பொன் வசந்தம்' படத்திலும் இந்த வாய்ப்பு தொடர்கிறது. இந்தப் படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார்.

இளையராஜா இசையில் தாமரை பாடல் எழுதுவது இதுவே முதல் முறை. ஏற்கெனவே இரு பாடல்களை முடித்துக் கொடுத்துவிட்டாராம் இளையராஜா.

பெப்சி பிரச்சினையால் இந்தப் படத்தின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரச்சினை தீர்ந்ததும், இந்த கோடை விடு முறையின் மறக்க முடியாத ஜில் ரொமான்டிக் படமாக நீதானே என் பொன் வசந்தம் வரவிருக்கிறது.

கவிஞர் தாமரை பிரபல துடிப்பான ஊடகவியலாளரும், கவிஞருமாவார்.

## இந்தியாவுடன் இணைந்து செயற்படத் தயார்

(மாலைதீவு)

மாலைதீவுகளில் அமைதி திரும்புவதற்காக இந்தியா மேற்கொண்டுள்ள முயற்சிகள் திருப்தியளிக்கிறது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

கடந்த சில திகதிகளுக்கு முன்பு மாலைத்தீவுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவிவந்தது.

இதையடுத்து இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை செயலர் ரஞ்சன் மத்தாய், மாலைதீவுகள் பயணம் மேற்கொண்டு அமைதியான சூழ்நிலை நிலவுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இதன் காரணமாக தற்போது மாலைதீவுகளில் இயல்புநிலை திரும்பியுள்ளது. விரைவில்



அங்கு இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நியூலாண்ட், மாலைதீவுகளில் அமைதியான முறையில் ஜனநாயகம் திரும்புவதற்கான நடவடிக்கைகளை இந்தியாவுடன் இணைந்து மேற்கொள்ள அமெரிக்கா தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

## அரச ஊழியர்களுக்கு கணினிக் கல்வி கட்டாயம்

அரச அலுவலகங்களில் பணிபுரியும் 50 வயதுக்கு குறைவானவர்களுக்கு கணினிக் கல்வி கட்டாயமாக்கப்பட உள்ளது என மாநில சட்டத்துறை அமைச்சர் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து துறையைச் சார்ந்த அரச ஊழியர்கள் அனைவரும் கணினி குறித்த கல்வி கற்றிருக்க வேண்டும். இதற்காக மாநில அரச ஊழியர்களுக்கு ஆண்டு தோறும் சுமார் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இதனைக் கொண்டு மூன்று மாத கால அவகாசத்திற்குள் கணினிக் கல்வியை முடித்திருக்கவேண்டும். இதன்மூலம் பதவி உயர்வு ஆண்டு சம்பள உயர்வு போன்றவை வழங்கப்படும். மூன்று வருடகால இடைவெளியில் கணினிக் கல்வியில் தோல்வியடைந்தால் பதவி உயர்வு மறுக்கப்படும். அதே தோல்வி நிலை நான்காவது ஆண்டும் தொடரும் பட்சத்தில் அவர்களுக்கான சம்பள உயர்வு குறைக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் 50 வயதுக்கு மேற்பட்ட அரச ஊழியர்கள் அவர்களின் வயது காரணத்தை முன்னிட்டு கணினி கல்வி கற்பதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

## அரபு நாடுகளில் "அம்மா" வின் பிறந்த நாள்

சவூதி அரேபியாவில் தமிழ் நாடு முதல்வர் ஜெயலலிதா பேரவை சார்பில் அவருடைய பிறந்த நாள் விழாவை அரபு நாடுகளில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவின் 64ஆவது பிறந்த நாள் விழா எதிர்வரும் 24ஆம் திகதி அதிமுகவினரால் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, புதுச்சேரி, கேரளா, மகாரார்'டிரா உள்ளிட்ட மாநிலங்களில் மட்டுமின்றி தற்போது கடல் கடந்து அரபு நாடுகளிலும் பிறந்த நாளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சவூதி அரேபிய ஜெயலலிதா பேரவை சார்பில் நடத்தப்படும் இந்தப் பிறந்த நாள் விழாவில், சவூதி அரேபியா பேரவைத் தலைவர் அன்பு, இணை செயலாளர்கள் கோபிசாந்த், ஜான்பாட்ஷா, ராஜேந்திரன், ராஜன் முன்னிலை வகிக்கின்றனர். துணை செயலாளர் நடராஜா வரவேற்கிறார்.

பேரவை துணை தலைவர் மைதீன், இணை செயலாளர் மனோகரன், முன்னாள் பேரவை இணை செயலாளர் சசிகுமார், ராமர், நவாஸ், சேகர், ஜெகபார் சாதிக் உட்பட பலர் சிறப்புரையாற்றுகின்றனர். ஏற்பாடுகளை சவூதி அரேபியா ஜெயலலிதா பேரவையினர் செய்து வருகின்றனர்.

## பாகிஸ்தான் குழு இந்தியாவுக்கு விஜயம்

(இஸ்லாமாபாத்)

மும்பை குண்டு வெடிப்பு குறித்த வழக்கு விசாரணையை மேற்கொள்வதற்காக பாகிஸ்தான் நீதிபதிகள் குழு எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி செல்லவுள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தியாவிற்கு செல்லும் புதிய குழு குறித்து இந்திய தூதரிடம் விளக்கமளிக்கப்படும் என தெரிவித்தார்.

முன்னதாக பெப்ரவரி மாதத்தில் பாகிஸ்தான் நீதபதிகள் குழு இந்தியா செல்வதாக இருந்தது. ஆனால் பல்வேறு காரணங்களால் இந்த நீதிபதிகளின் இந்திய பயணம் ஒத்திவைக்கப்பட்டது.

## 2 தலை, 3 கால்களுடன் அதிசய பெண் குழந்தை

(பஞ்சாப்)

பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் 2 தலை, 3 கால்களுடன் அதிசயப் பெண் குழந்தை பிறந்தது. பஞ்சாப் மாநிலததில் முஹம்மது ஆலம், நஹிதா தம்பதியருக்கு பிறந்த, அந்தக் குழந்தையின் மற்ற உடல் உறுப்புகள் இயல்பாகவே இருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் கூறியபோதும் குழந்தை பிறந்த 2 மணி நேரத்தில் இறந்துள்ளதாகத் தெரியவருகிறது.



## மெட்ரோ ரயில் திட்டம் பிரேசில் கையில்

(சென்னை)

சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் ரூபா 14,600 கோடி செலவில் வேகமாக நடைபெற்று வருகிறது.

இரண்டு வழித்தடங்களில் 45 கிலோ மீற்றர் தூரத்திற்கு பறக்கும் பாதையிலும், சுரங்கப் பாதையிலும் மெட்ரோ ரயில் பாதைகள் அமைக்கப்படுகின்றன.

மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்காக பல்வேறு நிறுவனங்களுக்கு 22 கட்டளைகள் விடப்பட்டுள்ளன. சுரங்கப் பாதை அமைப்பதற்காக சீனாவில் இருந்து கப்பல் மூலம் நான்கு பாரிய டனல் போரிங் இயந்திரங்கள் வந்துள்ளன.

முதலில் சென்னை வண்ணாரப் பேட்டையில் இருந்தும், செனாய



நகரில் இருந்தும் சுரங்கப் பாதை அமைக்கும் பணி இன்னும் 2 மாதங்களில் தொடங்கும். அதற்குள் மேலும் 7 டனல் போரிங் இயந்திரங்கள் சீனாவிலருந்து கப்பலில் வந்து சேர்ந்துவிடும் என்று மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கோயம்பேட்டில 68 ஏக்கர் பரப்பளவில் 7 மாடிகளுடன் நிர்வாக அலுவலகம், ஒட்டுமொத்த மெட்ரோ ரயில்களை இயக்கக்கூடிய அதிநவீன கட்டுப்பாட்டு மையமும், அதனை நிறுத்துவதற்கான இடமும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கான பணிமனையும் இங்கே பெரியளவில் அமைக்கப்படுகிறது. இதற்கான பணியில் 600 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இரவு, பகலாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், சென்னை மெட்ரோ ரயிலுக்காக குளு, குளு வசதிகளுடன் கூடிய ரயில பெட்டிகளை வடிவமைத்து, தயாரித்து, சோதனை செய்து, இயக்கித் தருவதுடன் அந்தப் பெட்டிகளை இயக்குவது பற்றி பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வேலைக்கான கட்டளை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அல்ஸ்டம் டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

## குறுஞ்செய்தி மூலம் மிரட்டல்

(திண்டுக்கல்)

இராணுவ உயர் அதிகாரிக்கு குறுஞ்செய்தி மூலம் மிரட்டல் விடுத்ததாக இராணுவ வீரர், சட்டத்தரணி ஆகிய இருவரை சைபர் கிரைம் பொலிஸார் விசாரணைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே சத்திரப்பட்டியை சேர்ந்த சங்கர் (வயது-34), காஷ்மீர் எல்லையில் இராணுவ வீரராகப் பணியாற்றுகிறார். விடுமுறைக்காக சொந்த ஊர் வந்த சங்கர் மற்றும் நண்பரான சட்டத்தரனி முருகானந்தம் இருவரும் இராணுவ உயர் அதிகாரிக்கு குறுஞ்செய்தி மூலம் மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து இவ்விருவரையும் நேற்று முன்தினம் பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர் எனத் தெரியவருகிறது.

# ஐ. நா. தீர்மானத்தின் எதிரொலி; நிமிடத்திற்கு 4 ரொக்கட்டுக்கள் வீச்சு




சிரியா ஜனாதிபதிக்கு எதிராக ஐ.நா சபையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் அந்நாட்டு பொதுமக்கள் மீது நிமிடத்திற்கு 4 ரொக்கெட்டுகளை வீசி இராணுவம் கடுமையான தாக்குதலை நடத்தி வருகிறது.

சிரியா ஜனாதிபதி பசீர் அல் அசாத் பதவியிலிருந்து விலக கோரி கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் கலவரம் நடந்து வருகிறது. இந்த தாக்குதலில் இதுவரை 7000க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

எனவே பொதுமக்களுக்கு எதிரான தாக்குதலை முடிவுக்கு கொண்டுவர அரபு நாடுகள் பல்வேறு சமரசத் திட்டங்களை கொண்டுவந்தன. ஜனாதிபதி அசாத்தை பதவி நீக்கம் செய்து அங்கு விரைவில் தேர்தல் நடத்த வலியுறுத்தப்பட்டது. ஆனால் ரஷ்யா, சீனா ஒத்துழைப்புடன் இவை முறியடிக்கப்பட்டன.

இதனையடுத்து சிரியாவில் மனித உரிமைகள் மீறுதல் போக்கு மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடைபெறுவதை கண்டிக்கும் தீர்மானம் ஐ.நா பொதுசபையில் கொண்டு வரப்பட்டது.

பின்னர் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. மொத்தம் உள்ள 193 நாட்டு பிரதிநிதிகளில் தீர்மானத்தை ஆதரித்து 137 நாடுகள் வாக்களித்தன. 17 நாடுகள் கலந்து கொள்ளவில்லை. தீர்மானத்துக்கு எதிராக சீனா, ரஷ்யா, ஈரான், வெனிசூலா, வடகொரியா உள்பட 12 நாடுகள் வாக்களித்தன. சிரியாவுக்கு எதிராக ஐ.நா சபையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையிலும் இராணுவத் தாக்குதல் நிறுத்தப்படவில்லை. மாறாக நேற்று முன்தினம் சிரிய இராணுவத்தினர் கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர்.

ஜனாதிபதி அசாத்துக்கு எதிர்ப்பு நிலவும் ஹோம்ஸ் மாகாணத்தில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக ரொக்கெட் குண்டுகளை வீசினார்கள். அங்குள்ள கால்டியா, பாய்யாடா ஆகிய இடங்களில் உள்ள வீடுகள் மீது குண்டுகள் விழுந்தன. இதுவரையில் இல்லாத வகையில் இராணுவத்தினர் தாக்குவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இதுபற்றி சிரியா கிளர்ச்சி இயக்க தளபதி ஹாதி அப்துல்லா கூறுகையில், கடந்த 14 நாட்களில் இல்லாத அளவில் கலவரம் வெடித்துள்ளது. இதுவரையில் இப்படியொரு தாக்குதலைப் பார்க்கவில்லை. நிமிடத்துக்கு 4 ரொக் கெட்டுகள் வீசப்படுகிறது என்றார்.

# ஈரானுடன் போர் வேண்டாம் இஸ்ரேலிடம் ஜப்பான் வேண்டுகோள்

(டோக்கியோ)

அணுஆயுத தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி, ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் உள்பட பல நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. இதற்கிடையில் டெல்லியில் இஸ்ரேல் தூதரக கார் மீது தாக்குதல் நடந்தது. மறுநாளே தாய்லாந்தில் வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது. இந்த 2 தாக்குதலுக்கும் காரணம் ஈரான்தான் என்று இஸ்ரேல் புகார் கூறிவருகிறது. தீவிரவாத நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால், ஈரான் மீது போர் தொடுப்போம் என்று இஸ்ரேல் பகிரங்கமாக மிரட்டல் விடுத்தது.இந்நிலையில், ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாம், பொறுமையாக இருங்கள் என்று இஸ்ரேல் ஜனாதிபதியை பிரதமரை ஜப்பான் பிரதமர் நோடா கேட்டுக் கொண்டுள்ளார். ஐந்து நாள் பயணமாக ஜப்பான் சென்றுள்ளார். இஸ்ரேல் இராணுவ அமைச்சர் ஹெதித் பராக்கிடம், நோடோ இதை வலியுறுத்தினார். ஈரான் மீது தாக்குதல் நடத்தினால், பயங்கரப் பின்விளைவுகள் ஏற்படும். இப்போதுள்ள பிரச்சினையும் பூதாகரமாகி விடும். எனவே பொறுமையாக இருங்கள். இராணுவ நடவடிக்கை வேண்டாம் என்று பராக்கிடம் நோடா கூறியுள்ளார்.



# பயங்கரவாதிகளைக் கொண்டு வாருங்கள் பாகிஸ்தானிடம் ஹர்சாய் ஆவேசம்

தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் தன் நாட்டில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை கொண்டு வரவேண்டும் என்று ஆப்கான் ஜனாதிபதி ஹர்சாய் கோபமாக கூறியதாகவும், அதனால் பாகிஸ்தான் அதிர்ந்து போயுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானில் தலிபானுக்கு எதிரான நேட்டோ படைகளின் தாக்குதல் பெரிய அளவில் பலனைத் தராத நிலையில் தலிபானுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதுதான் சிறந்தது என ஆப்கான், அமெரிக்க நாடுகள் முடிவெடுத்துள்ளன. இதற்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பும் அவசியம் என அவை கூறி வருகின்றன.

ஆப்கானின் முன்னேற்றம் குறித்து பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில், ஆப்கான், பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் முத்தரப்பு சந்திப்பு இடம்பெற்றது.

இதில் முதல் நாள் பேசிய ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், ஆப்கான், தலிபான் மற்றும் அமெரிக்கா இடையே முறையான தகவல் தொடர்பு பேணப்பட்டு வருவதாகவும், பேச்சுவார்த்தைக்கு வர தலிபான் விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இதற்கு தலிபான் தரப்பு மறுப்பு தெரிவித்தது. அதே நேரம் பேச்சு நடப்பதாக ஆப்கான் ஒப்புக் கொண்டிருப்பதை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா வரவேற்றுள்ளார்.


## அமெரிக்காவுக்கு போட்டியாக சீனாவும் முன்வந்துள்ளது

சீனா எதிர்வரும் ஜூன் அல்லது ஆகஸ்டு மாதத்தில் வான்வெளி வீரருடன் புதிய செயற்கைகோளை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே சீனா கடந்த 2003ஆம் ஆண்டில் இருந்து 3 தடவை வான்வெளி வீரர்களுடன் செயற்கைகோளை அனுப்பியுள்ளது.

இந்த செயற்கைகோளை செலுத்தியவுடன் இதற்கு அடுத்த கட்டமாக வான்வெளியில் ஆய்வு மையத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது. இதற்காக 3 வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் விண்வெளியில் முழுமையாக இயங்கும் ஆய்வு கூடம் ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டுள்ளது. இந்த ஆய்வு மையம் அமைக்கப்பட்டால் அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக விண்வெளி ஆராய்ச்சியில் சீனா மிகச்சிறந்த ஒரு நாடாக மாறி விடும் என்பதில் சந்தேகமில்லை.



# பொது இடங்களில் சிகரெட்டுக்கு தடை; புகைமண்டலமாக மாறும் வீடுகள்

புகை, மது கெடுதல் என்று தெரிந்தாலும் பிரசாரம் செய்யப்பட்டாலும் விற்பனை எவ்வித குறைவும் இல்லாமல் தான் நடைபெறுகின்றது.

பொது இடங்களில் புகை பிடிக்க சில நாடுகளில் தடை உள்ளது. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இந்தத் தடையால் மக்களிடம் புகைப் பழக்கம் குறைந்துள்ளதா என்று சர்வதேச புகையிலை கட்டுப்பாடு வாரியம் சமீபத்தில் ஆய்வு நடத்தியது.

தடை விதிக்கப்படும் முன்பு கருத்துக் கணிப்புகளில் கிடைத்த விவரங்களும் ஆராயப்பட்டன. இதில் தெரியவந்த தகவல்கள் பற்றி வாரிய அதிகாரிகள் கூறியதாவது, பொது இடங்களில் புகைபிடிக்க தடை விதிப்பது நேர் மற்றும் எதிர்மறை விளைவுகளை சமஅளவில் ஏற்படுத்துகிறது. பொது இடங்களில் புகை பிடிக்க தடைஇருப்பதால், வீடுகளில் புகை பிடிப்பது அதிகரித்திருக்கிறதா என்றும் ஆய்வு நடத்தப்பட்டது. தடைக்குப் பிறகு வீட்டில் புகை பிடிப்போரின் எண்ணிக்கை அயர்லாந்தில் 25 சதவீதமும், பிரான்சில் 17 சதவீதமும், ஜேர்மனியில் 38 சதவீதமும், நெதர்லாந்தில் 28 சதவீதமும் அதிகரித்துள்ளதுஎன்றார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

பழங்காலத்தில் வரலாற்றாசிரியர்கள் தங்களுக்குத் தெரியாத விஷயங்களும் உண்டு என்பதைக் காட்டத் தங்கள் நூலில் வெற்றுப் பக்கங்களையும் விட்டு வைப்பார்களாம். இப்போது அப்படி வெற்றுப் பக்கங்களை யாரும் விடுவதில்லை என்பதால் எல்லோருக்கும் எல்லாம் தெரிந்துவிட்டது என்று அர்த்தமாகி விடுமா?

**– க.நா.சு.**

மன்னராட்சிக் காலத்தில் அரசனை தெய்வத்தின் ஆற்றல் பெற்றவனாகச் சித்தரித்து அவனது அதிகாரத்துக்குக் கீழ் குடிமக்களை அடிமைப்படுத்தி வைப்பதிலும், எதிர்ப்புணர்வை மழுங்கடிப்பதிலும் மதம் முக்கிய பங்காற்றியது. அன்று மதம் ஏற்றுக் கொண்டிருந்த பணியை இன்று தொடர்புசாதனங்கள் கையேற்றிருக்கின்றன.

**– அ.மார்க்ஸ்**

எவன் வாழ விரும்புகிறானோ, அவனை அவன் மனதுக்குப் பிடிக்காத விஷயங்களை செய்யக் கட்டாயப்படுத்த முடியும். எவன் சாகத் தயாராக இருக்கிறானோ, அவன் மட்டும்தான் எல்லா விதமான பிரச்சினைகளையும் தவிர்க்க முடியும். ஆனால் அவனால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. மரணம் மட்டும்தான் நமக்குச் சாதகமான சாட்சியம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**– ஸீக்ஃப்ரீட் லென்ஸ்**

இன்னும் நிரூபிக்க முடியாத ஒன்றின் மீது நம்பிக்கை வைக்க எவ்வாறு சாத்தியம் இருக்கிறதோ அவ்வாறே உண்மை என்று நிரூபிக்கப்பட்டிருந்தாலும் அதன்மீது அவநம்பிக்கை கொள்வதற்கும் சாத்தியம் இருக்கிறது.

**– ரோல்ஃப் ஹொஷுத்**

நம்மில் ஒவ்வொருவரும் பலர் – விரோதிகள், நண்பர்கள் – சாக வேண்டுமென்று அவ்வப்போது ஆசைப்பட்டுள்ளோம். நாம் எல்லோரும் ரகசியமான உன்னதமான தனிப்பட்ட மயானம் ஒன்றை நிறுவியுள்ளோம். நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுக்கு நாம் விரும்பியதெல்லாம் நேர்ந்திருந்தால், இந்த உலகத்தில் மனிதர்கள் தொகைப் பெருக்கம் என்ற பிரச்சினையே இருந்திருக்காது. ஆனால் ஒன்று! விருப்பத்திற்கும், நடைமுறைக்கும் இடைவெளி இருக்கிறது – மெல்லிய காகிதச்சுவர் போல.

**– கொன்ஸோல்**

குறுகிய அரசியல் இலக்கணங்களைத் தவிர்த்துவிட்டால், எந்தத் தன்மானமுள்ள மனிதன் இடதுசாரியில்லை? சுயகௌரவம் உள்ள எவனுக்கு ஒரு சமூகத்தையோ அல்லது இதர உதிரி மனிதர்களையோ சுரண்டி வாழ மனம் இடங்கொடுக்கும்? மனச்சாட்சியுள்ள எந்த மனிதன் மற்றவருக்கு மறுத்து தனக்கு மட்டும் சலுகைகள் தரப்பட வேண்டுமென வாதம் புரிவான்?

**– அசோகமித்திரன்**

யார் ஒருவரைப் பற்றியும் அல்லது எந்த ஒன்றைப் பற்றியும் ஒட்டுமொத்தமான ஒரு கருத்தைச் சொல்வது கஷ்டம். மலையைக் காட்டி இதன் வடிவம் என்ன என்று கேட்டால் என்ன பதில வரும். ஒழுங்கற்ற கூம்பு வடிவம் என்றொருவர் சொல்லலாம். ஆனால் அந்தப் பதிலைச் சொல்லுமுன் அவர் ஒரு விளக்கம் கேட்டிருக்க வேண்டும். எந்த இடத்தில் நின்று நோக்கும்போது என்று. குறைந்தபட்சம் அவர் அதைச் சொல்லும் போதாவது "நான் நிற்கும் இடத்திலிருந்து நோக்கினால்" என்று சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும். அவர் அவசரப்பட்டு சிந்திக்கிறார். சிந்தனையில் நிதானம் என்பதற்கு ஒரே பொருள்தான், நிதானமான சிந்தனை தன்னை மையமாக்கி நோக்குவதை மெல்ல மெல்ல குறைத்துக் கொண்டே வரும்.

**– நித்ய சைதன்யா**

வளரிளம் பருவத்தில் நாம் மற்றவர்கள் முன்னால் நம்மைக் காட்டிக்கொள்கிற விதம்தான் நம்முடைய வாழ்க்கை என்றும், நம்முடைய ஆளுமை என்றும் நினைத்துக் கொள்கிறோம். அதாவது அப்போது "இருத்தல்" என்றாலே, தோற்றமளிப்பதுதான். விதவிதமாக பிறரிடம் நம்மை நிரூபித்துக் கொள்வது பற்றியே கனவு கண்டுகொண்டிருக்கிறோம்.

பழப்பழயாக நம்மை மற்றவர்கள் பொருட்படுத்தவில்லை என்றும், அவர்களுக்கும் நமக்கும் பெரிய தொடர்பெல்லாம் ஒன்றும் இல்லை என்றும் தெரியவருகிறது. ஒரு தோற்றத்தை மட்டும் மற்றவர்களுக்குத் தந்துவிட்டு நம்முடைய விருப்பப்படி நம்மை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் புரிந்து கொள்கிறோம்.

**– கன்னியாகுமரி நாவலில்**

பட்டியாடுகள் மாதிரி அடைக்கப்பட்டு பாமரத்தனத்தில் நிலை நிறுத்தப்பட்டவர்களை மீட்டெடுக்க, என்னதான் குறைபாடுகள் உள்ளதானாலும், என்னதான் ஆதிக்கக் கறை படிந்தாலும் அமைப்புகள்தானே வேண்டியிருக்கும்? சொல்லப்போனால் மனிதர்கள் எப்போது சமூகமாகத் திரண்டார்களோ, அப்போதே அமைப்பு என்கிறது வந்தாச்சு. எந்த அமைப்பும் நாளாவட்டத்தில் வெளிறி, பிசுக்கேறி, ஒளிமங்கி, கரப்பான் குடியமர்கிற கழிவறை மாதிரி கறுத்துப் போகும்தான். ஒன்றைக் கட்டமைக்கிறதில் உள்ள தீவிரம் அதை காத்துப் பராமரிக்கிறதிலயும் இருந்தாலொழிய இதுக்கு முன்னோக்கமுள்ள தீர்வு கிடைக்குமென்று தோன்றவில்லை.

**– கவிதாசரண்**

# யுத்தத்தில் காணாமற் போன இன்னொன்று!

ஒழுங்குகள் சிதையும் நிலையை யுத்தத்தின்போது வெளிப்படையாகவே பார்க்கலாம். கண்முன்னே நிகழும் மாற்றங்கள். சடுதியான மாற்றங்கள். ஒரு கிராமம் ஒரு சில மணி நேரத்தில் அப்படியே கைவிடப்பட்டு வெறிச்சோடி விடும். ஒரு நகரம் கணப்பொழுதில் சிதைந்து போகும். கண்ணுக்கு முன்னே பிரமாண்டமாக விரிந்திருக்கும் கட்டிடங்கள் நடக்கின்ற குண்டு வீச்சில் நொடிப்பொழுதில் பொடியாகிக் கற்சிதிலமாகிவிடும்.

ஒரு அமைதியான நிரந்தர வாழ்க்கை மறு நொடியில் அகதி வாழ்க்கையாகி கொந்தளிக்கும் மனிதரைத் தெருவுக்குக் கொண்டு வந்து சேர்க்கும். இடம், பொருள், நிலை எதுவும் நிரந்தரமற்றது என்பதை யுத்தத்தின்போது தெளிவாகவே பார்க்கலாம். எல்லா அர்த்தங்களும் அர்த்தமின்மை என்றாகிக் கொண்டிருப்பது யுத்தத்தின்போதே. எல்லா விழுமியங்களும் சிதிலமாகி விடும் அப்போது. நிறங்கள் உதிரும் விதியைத் தன்னுடைய ஆயுள்ரேகையாகக் கொண்டது யுத்தம்.

அது வன்னியில் இறுதி யுத்தம் ஆரம்பமாகிய நாட்கள். 2007க்குப் பிந்திய காலம். யுத்த அரங்கு விரிய விரிய இழப்புகளும் சேதங்களும் அதிகமாகிக் கொண்டேயிருந்தன. போராளிகள் தொடர்ச்சியாகச் சாவினைச் சந்தித்துக்கொண்டேயிருந்தார்கள். களத்தில் விழுகின்ற போராளிகளின் மாவீரர் பட்டியல் நீண்டுகொண்டே போனது. எந்த நாளும் எந்தத் தெருவிலும் சோக கீதம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

யுத்தம் தீவிரமடையத் தொடங்கிய ஒரு குறிப்பிட்ட காலம் கீழே சோக கீதமும் மேலே 'வண்டு' என்று சனங்கள் 'கிலி'யுடன் சொல்கிற உளவு விமானத்தின் இரைச்சலுமே எங்களின் காதுகளை நிறைத்துக் கொண்டிருந்தன. பிறகு சோக கீதத்தைப் போடுவதற்கான நிலைமை இல்லாமற் போய்விட்டது. ஆனால், வேவு விமானத்தின் இரைச்சல் நிற்கவேயில்லை. வேவு விமானங்களின் உபயத்தை அமெரிக்கா அல்லவா செய்திருந்தது!

அதனால், அந்த ஆளில்லா உளவு விமானங்கள் ஒன்று மாறி ஒன்றாக எந்த நேரமும் வானிலே நின்று நிலத்தை நோட்டமிட்டுக் கொண்டிருந்தன. வேவு விமானம் நிற்குந்தோறும் கள நிலைமை மோசமாகிக் கொண்டேயிருந்தது. (களநிலைமையை மோசமாக்குவதே அவற்றின் நோக்கம்).

கள நிலைமை மோசமாக மோசமாக மாவீரர் பட்டியலும் நீண்டு கொண்டேயிருந்தது. மாவீரர் பட்டியல் நீள நீள துயிலுமில்லங்களும் பெருத்துக் கொண்டே போயின. 'வன்னியே துயிலுமில்லங்களால் நிறையப்போகிறதோ?' என்று அந்த நாட்களில் ஒரு நண்பர் கேட்டதே இப்பொழுது நினைவுக்கு வருகிறது. அப்படித் துயிலுமில்லங்கள் பெருத்துக் கொண்டு போகிறதை நினைத்தோ என்னவோ ஒரு வித்தியாசமான முடிவைப் புலிகள் எடுத்திருந்தனர்.

மாவீரர் பட்டியலின் முடிவற்ற நீட்சியை மதிப்பிட்டார்களோ அல்லது சண்



டையின் தீவிரம் என்னமாதிரியான நிலைமைகளையெல்லாம் உருவாக்கப் போகிறது என்று கருதினார்களோ தெரியாது, ஆனால் இதையெல்லாம் மனதில் வைத்து யாரோ ஒரு தீர்க்கதரிசியின் ஆலோசனையின்படி ஒரு வித்தியாசமான ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள்.

இதனால் விசுவமடு, முள்ளியவளை, கிளிநொச்சி, மல்லாவி - தேறாங்கண்டல் போன்ற இடங்களில் இருந்த மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அருகில் துயிலுமில்லங்களின் விரிவாக்கம் பற்றித் திடீரென அறிவிப்புப் பலகைகள் நடப்பட்டன. அந்த அறிவிப்புப் பலகைகளில் 'இந்தக் காணி மாவீரர் துயிலுமில்லத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது' என்ற வாசகம் மிகத்துலக்கமாகப் பொறிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே பல ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் இந்தத் துயிலும் இல்லங்கள் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான கல்லறைகளால் நிரம்பியிருந்தன. மேலும் அங்கே புதிய கல்லறைகள் உருவாகிக்கொண்டும் இருந்தன. இதைவிட எப்போதும் ஒரு பத்துப் பதினைந்து குழிகள் (விதைகுழிகள் என்று இந்தக் குழிகளை வன்னியில் அழைப்பது வழக்கம். ஏனெனில் ஒரு போராளி புதைக்கப்படவில்லை. விதைக்கப்படுகிறார் என்ற உணர்வின் அடிப்படையில் இவ்வாறு சொல்லப்படுவதுண்டு) வெட்டப்பட்டிருக்கும்.

என்னதானிருந்தாலும் இந்தக் குழிகளைப் பார்க்கவே மனம் பதைக்கும்; உறுத்தும். யாருடையதோ மரணத்தை எதிர்பார்த்து, நிச்சயமாக எதிர்பார்த்து இந்தக் குழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இப்படி ஒவ்வொரு துயிலும் இல்லங்களிலும் குழிகள் வெட்டப்பட்டேயிருக்கும். இதற்காக என ஒவ்வொரு துயிலும் இல்லங்களிலும் பணியாட்களும் தயார் நிலையில் இருந்தார்கள். ஈரமண் காயாத சவக்குழிகளால் நிரம்பிக்கொண்டேயிருந்தன ஒவ்வொரு துயிலுமில்லங்களும். (இன்னொரு பக்கத்தில் பதுங்கு குழிகள்).

இந்தக் குழிகளைப் பார்க்கின்ற போராளிகளுடைய பெற்றோரின் மனநிலை எப்படியிருக்கும்? என நான்



நினைத்துப் பார்ப்பதுண்டு. சில நண்பரகளும் இதைப்பற்றிப் பல சந்தர்ப்பங்களிலும் தங்களுடைய கவலைகளையும் அபிப்பிராயங்களையும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், போரின் போககின்படி அங்கே, அப்படிப் புதைகுழிகளை (விதைகுழிகளை) வெட்டி வைத்திருப்பது தவிர்க்க முடியாத ஒரு நிலையே.

ஆகவே, இந்த நிலைமையின் தீவிரத்தை உணர்ந்ததாலோ என்னவோ, துயிலும் இல்லங்களின் இடவசதி குறித்த முன்னெச்சரிக்கையின்படி அவர்கள் இந்தப் புதிய எல்லைகளை விரிவாக்கம் செய்வதைப்பற்றிச் சிந்தித்திருக்கிறாரகள். எனவேதான், 'இந்தக் காணி மாவீரர் துயிலுமில்லத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது' என்ற அறிவிப்புப் பலகைகள் நாட்டப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்த அறிவிப்புப் பலகையானது, அங்கேயுள்ள போராளிகளுடைய மனதிலும் பெற்றோருடைய உளநிலையிலும் மிகப் பாதகமான தாக்கங்களையெல்லாம் ஏற்படுத்தும் என யாரும் சிந்தித்ததாக இல்லை. இந்தக் குழிகளைப் பார்க்கும்போது, முடிவற்றதாக நீண்டு செல்லப்போகின்றன கல்லறைகள். கல்லறைகளின் தொகை பெருகப் பெருக துயிலும் இல்லங்களின் விரிவும் கூடப்போகிறது. இதெல்லாம் கூடக்கூட மரணமும் பெருகும். மரணம் பெரும் ஒரு சமூகத்தின் நிலை அல்லது ஒரு சூழலிலின் நிலைமை மோசமாகும் என்பதெல்லாம் தெளிவாகவே எவருக்கும் தெரியும்.

இவையெல்லாம் நிச்சயமாக மக்களின உளநிலையில் எதிர்மறையான அம்சங்களையே ஏற்படுத்தும். ஏன் போராளிகளின் உளநிலையிலும்கூட இது பெருந்தாக்கங்களை ஏற்படுத்தும். என்னதான் சாவுக்கஞ்சாத - சாவை விரும்பி ஏற்கின்ற மனநிலையை பெரும்பாலான போராளிகள் கொண்டிருந்தாலும் இந்தத் துயிலும் இல்லங்களின் விரிவும் கல்லறைகளின் பெருக்கமும் நிச்சயமாக சிந்திக்கும் போராளிகளிடத்தில் கவலைகளையும் வெறுமையையுமே உருவாக்கும். இதைச் சில போராளிகளே கூறியுமிருக்கிறார்கள்.

ஆனால், இயக்கத்தின் பொதுத்தீர்மானங்களுக்கு அப்பால் அவர்களால் எதையும் செய்ய முடியாது. 'இயக்க உறுப்பினர்' என்ற அடையாளம் அவர்களைக் கட்டுப்படுத்தியது. அமைப்புகளில் அல்லது அமைப்பைச் சார்ந்து இயங்கும்போது இத்தகைய கட்டுப்பாடுகளும் மட்டுப்பாடுகளும் ஏற்படுவது இயல்பு. அமைப்பின் விதிக்கு அத்தனை வலிமையுண்டு. அது தனி மனிதர்களின் உணர்வுகளையும் அபிப்பிராயங்களையும் இரண்டாம் மூன்றாம் நிலைக்குத் தள்ளி விடும். சிலவேளை அவற்றுக்கு இடமேயில்லை என்று ஆக்கி விடுவதும் உண்டு.

ஆகவே மாவீர் துயிலுமில்லங்களின விரிவாக்கம் பற்றிய இந்த அறிவிப்பலகைகள் பகிரங்கமாகவே - அங்குள்ள முக்கியமான வீதியோரங்களில் பளிச்செனக் கண்களுக்குத் தெரியக்கூடிய மாதிரி நாட்டப்பட்டிருந்தும் இதைக் குறித்து யாரும் வெளிப்படையாக எந்தக் கருத்தையும் தெரிவித்த மாதிரித் தெரியவில்லை.

இதைப் பார்த்த நானும் இன்னொரு நண்பருமாக இதைப் பற்றி, புலிகளின் மேலிடத்திலுள்ள உரையாடக்கூடிய நிலையில் இருந்தவர்களுடன் பேசினோம். 'இப்படித் துயிலும் இல்லங்களுக்கான காணிகளை மேலதிகமாக ஒதுக்கும்போது அது போராளிகளின் சாவு வீதத்தைக் கூட்டுவதாகவே காட்டுகிறது. உண்மையில் ஒரு போராட்டத்தின் வளர்ச்சியில் சாவு வீதம் குறைந்து கொண்டே செல்லும்; இழப்புகள் அப்படிக் குறைந்தே செல்ல வேணும். அனுபவங்களும் புதிய சிந்தனைகளும் செயலின் முறைகளும் இழப்புகளையும் சேதங்களையும் நிச்சயமாகக் குறைகக்கும். அப்படியல்லாமல் அவை அதிகரித்திருக்குமானால், நிச்சயமாக போராட்டம் நெருக்கடியை நோக்கி, வீழ்ச்சியை நோக்கிச் செல்கிறது என்றே அர்த்தப்படும்' என்றோம்.

மேலும், 'புலிகளைப் பொறுத்த வரை அவர்கள் புதிய நுட்பங்களையும் உச்சமான தொழில் நுட்ப வசதிகளையும் பயன்படுத்துகிறவர்கள். புதிய வகையான - வலுக்கூடிய ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றவர்கள் என்ற அபிப்பிராயம் பொதுவாகவே உண்டு. ஆகவே, நிச்சயமாக இந்த நிலையில் போராளிகளின் இழப்பு வீதம் குறைவடையவே வாய்ப்புண்டு. இதையெல்லாம் கடந்தும் மிகச் சாதாரணமாக தினமும் பல போராளிகள் - சாவடைவதென்பது நிலைமையைக் குறித்துக் கவலைப்படும்படியாகவே இருக்குமல்லவா? என்றும் கேட்டோம்.


இதைக் கேட்ட அவர்கள், இதைப் பற்றி மேலிடத்துக்கு எழுதும்படி சொன்னார்கள். ஆனால், அவர்கள் அப்படிச் சொன்னாலும் நாம் நினைத்த மாத்திரத்தில், நினைத்த மாதிரி எழுதிவிட முடியாது. அப்படி எழுதுவதை நாங்கள் விரும்பவும் இல்லை. ஏனென்றால், புலிகளைப் பொறுத்தவரையில் எந்த மாதிரியான விசயத்தைப் பற்றி அவர்களுடன் பேசுவதானாலும் அதை அவர்கள் எப்படி விளங்கிக் கொள்வார்கள், எப்படிப் புரிந்து கொள்வார்கள் என்ற பிரச்சினை ஒன்றுள்ளது.

எதையும் மாறி விளங்கினால் அது தேவையற்ற பிரச்சினைகளைக் கொண்டு வந்து விடும். அதிலும் சில விசயங்களில் அவர்கள் கடுமையான 'சென்ரிமென்ற்' உள்ளவர்கள். குறிப்பாக இந்த மாதிரி போராளிகள், மாவீரர்கள் போன்ற விசயங்களில் இந்தச் 'சென்ரிமென்ற்' தனம் இன்னும் அதிகம். அதை விட யுத்த நிலைமையானது பதற்றத்தை வேறு அதிகரித்திருக்கும் சூழலில் இதைக் குறித்துப் பேசுவது என்பது சற்று யோசிக்க வேண்டியது.

ஆனால், நாங்கள் உரையாடிய விசயம் எப்படியோ பரவலாகி அது உரிய இடங்களுக்குச் சென்று விட்டது.

விளைவு, போடப்பட்டிருந்த அந்த அறிவிப்புகள் அகற்றப்பட்டன. என்ற போதும் கல்லறைகள் கூடிக்கொண்டேயிருந்தன.

புதுக்குடியிருப்பில் இரணைப்பாலை, தேவிபுரம், மாத்தளன் - பச்சைப் புல்வெளி, இரட்டை வாய்க்கால், முள்ளி



வாய்க்கால் என இறுதிவரையில் துயிலுமில்லங்கள் வெவ்வேறு இடங்களில் புதிது புதிதாக முளைத்துக்கொண்டேயிருந்தன. தென்னந்தோப்பில், வெளிகளில், ஒதுக்குப் புறக்காட்டில், பனங்கூடல்களின் நடுவே, கடற்கரையில் என எல்லா இடங்களிலும் போராளிகள் புதைக்கவோ விதைக்கவோ பட்டனர்.

ஆனால், இறுதி நாட்களில் சாவடைந்த போராளிகளுக்கான அஞ்சலிகளோ வீர வணக்க நிகழ்வுகளோ நடக்கவில்லை. அப்படியெல்லாம் நடககக்கூடிய சூழல் அங்கேயில்லை. இறுதிக்கணத்திலே ஒலிக்கப்படும் மாவீரர் வணக்கப்பாடல் நிறுத்தப் பட்டுப் பல நாட்களாகி விட்டன. மரியாதை வேட்டுகள் கூடத் தீர்க்கப்படவில்லை. கூடவே நாலு போராளிகள் கூட இல்லாத நிலை உருவாகிக் கொண்டிருந்தது.

யாரெல்லாம் களத்திலே வீழ்கின்றார்கள் என்றே தெரியாத - அதை அறிவிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இப்படியே இருந்த நிலைமை இறுதி வரையில் மாறவேயில்லை. மேலும் மேலும் அது ஒழுங்கமைக்க முடியாதளவுக்கு நிலைகுலைந்தே சென்றது.

அந்த நண்பர் முன்னர் சொன்னதைப்போல இறுதியில் வன்னியிலே சனங்கள் இருந்த வலைஞர் மடம், இரட்டை வாய்க்கால், முள்ளி வாய்க்கால் பகுதிகள் பெரிய துயிலுமில்லங்களாக - புதைகுழிகளாகவே மாறின. ஒரு மாபெரும் புதைமேடாக அந்தப் பகுதியில் ஏராளம் மனிதர்கள் பிணங்களாகினர். அதில் புலிகள், படையினர், சனங்கள் என்ற எல்லா வகையும் இருந்தது. பலி. பலி. பலி. பலியைத் தவிர வேறெதுவும் அங்கே அப்போதிருக்கவில்லை.

இறுதி நிகழ்ச்சிகள் இப்படியானதொரு பலியரங்கில்தான் முடியும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. ஆனால், அப்படியாகவே அது நடந்து முடிந்தது.

எல்லாம் முடிந்து விட்டன. இப்போது நினைத்துப் பார்த்தால், புலிகளின் முதற்போராளியாக லெப்ரினன்ட் சங்கர் என்ற சத்தியநாதன் 1982 இல் வீழ்ந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், வன்னியின் கடைசிப்போர்க்களத்தில் இறுதியாக வழ்ந்த போராளி யார்? அவர் எப்போது வீழ்ந்தார்? எங்கே வீழ்ந்தார்? எப்படி வீழ்ந்தார்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் யாரிடமுள்ளது பதில்?

உண்மையில் வரலாறு விசித்திரமான ஒரு பயணிதான்.

- கருணாகரன்

# கைதிக்கு மனநிலை பாதிப்பு?
## வைத்திய அறிக்கைக்காக வழக்கு ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட இளம் பெண்ணொருவர் மனநிலை பாதிக்கப்பட்டுக் காணப்பட்டமையினால் அவரைப் பற்றிய வைத்திய அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வழக்கு மேல் நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் கிளிநொச்சி, வட்டக்கச்சியைச் சேர்ந்த நடராசா ராஜேஸ்வரி (வயது -28) என்னும் இளம் பெண் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 26.11.2008 இல் நாச்சிக்குடாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் 2010 ஆம் ஆண்டு இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவரது மனநிலை பாதிக்கப்பட்டிருந்தமையினால் ஏறக்குறைய ஒன்றரை வருடங்கள் இவருக்கு எதிரான விசாரணைகள் தொடரப்பட முடியாமல் பிற்போடப்பட்டு வந்தன.

இந்நிலையில் கடந்த 16 ஆம் திகதி இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பெண் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணரின் வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனத் தெரிவித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் வழக்கினை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிர்த் தரப்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டத்தரணி வி.திருக்குமரன் ஆஜராகியிருந்தார். (137)

# அம்புலன்ஸ் வண்டி இல்லை
## அம்பன் நோயாளிகள் அவதி


(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் வைத்தியசாலைக்கு நிரந்தரமான அம்புலன்ஸ் வண்டி ஒன்று இல்லாமையினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யுத்தப் பாதிப்புக்குள்ளான இவ்வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்க ஆரம்பித்தபோது அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

இவ்வண்டியை சுகாதாரத் திணைக்களம் மீளப் பெற்றதை அடுத்தே, நோயாளர்களின் தேவைகளின்போது அம்புலன்ஸ் வண்டி இல்லாதிருப்பதினால் நோயாளர்கள் சிரமங்களுக்கு ஆளாவதினால் நிரந்தரமாக அம்புலன்ஸ் வண்டி ஒன்றை வைத்தியசாலைக்கு வழங்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

# தொடரை வென்றது இங்கிலாந்து



(டுபாய்)

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் டுபாயில் நடைபெற்றுவரும் சர்வதேச ஒரு நாள் போட்டித்தொடரின் நேற்றைய மூன்றாவது போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றி, பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்தது. நேற்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவ்வணியின் வீரர்களின், உமர் அக்மல் (50) மற்றும் அப்ரிடியை (51) தவிர ஏனைய வீரர்கள் எவரும் சோபிக்காத நிலையில் அணி 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 22 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. உமர் அக்மல், அப்ரிடியைத் தவிர மொகமட்ஹபீஸ் 29, உமர்குல் 27 ஆசாத் சபீக் 18 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பின், புரோட் இருவரும் தலா 3, அன்டர்சன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து 223 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இங்கிலாந்து அணியில் குக் மற்றும் பீற்றர்ஸன் இருவரும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். இவர்கள் இருவரும், பாகிஸ்தான் பந்துவீச்சை மிகச் சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்தனர். ஆரம்ப இணைப்பாட்டத்தைப் பிரிப்பதற்கு பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் முயன்றும் அது முடியாத காரியமாகவே இருந்தது.

இந்த நிலையில் அணி 170 ஓட்டங்களை, 28.2 ஓவரில் பெற்றிருக்கையில் குக் 80 ஓட்டங்களுடன் அஜ்மலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் பீற்றர்ஸனுடன் மோகன் இணைந்தார். இந்த ஜோடி சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது. ஒரு விக்கெட்டை மட்டும் இழந்த இங்கிலாந்து அணி 37.2 ஓவரில் 226 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது, இதில் பீற்றர்ஸன் 111, மோர்கன் 24 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். போட்டியின் ஆட்ட நாயகனாக பீற்றர்ஸன் தெரிவானார். 4 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் 3:0 என இங்கிலாந்து வெற்றிபெற்று, டெஸ்ட் தொடர் தோல்விக்கான பழிக்கணக்கைத் தீர்த்துக் கொண்டது.

# சட்டவிரோத இறைச்சி வியாபாரம்
## கைதான மூவருக்கும் பிணை

(திருநெல்வேலி)

அனுமதியின்றி மாடுவெட்டி மாட்டிறைச்சியை விற்பனைக்காகக் கொண்டுசென்ற வேளை, யாழ். ஐந்துசந்தியைச் சேர்ந்த மூவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டனர். இவர்களைக் கைதுசெய்த பொலிஸார் நேற்று முன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இவர்களை விசாரணை செய்த நீதவான் மா.கணேசராசா மூவரில் ஒருவரை இருபத்தையாயிரம் ரூபாவுக்கு இரண்டு ஆட்பிணையிலும், இருவரை தலா பத்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும் செல்வதற்கு அனுமதித்துப் பிணை வழங்கி உத்தரவிட்டார். (137)

# விழிவெண்படல தானம்
## இணையமூடாக விண்ணப்பம்

விழி வெண்படலங்களை தானம் செய்ய விரும்புவோர் இணையத்தளத்தின் ஊடாக தம்மை பதிவுசெய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு தேசிய கண் வங்கி ஸ்தாபிக்கப்பட்ட ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் அதன் உத்தி யோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யுப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் விழி வெண்படலங்களை தானமாக வழங்கவிரும்புவோர் தம்மை பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உலகில் தற்போது வெற்றிகரமாக இயங்கிவரும் கண் வங்கிகளுக்குள் இலங்கையின் தேசிய கண் வங்கியும் இணைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வருட காலத்தில் தேசிய கண் வங்கியில் துரித முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித்த மஹிபால கூறியுள்ளார்.

இதேவேளை, கண் வங்கி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடகாலத்தில் 450 விழிவெண்படலங்கள் கண் பார்வை குறைந்தவர்களுக்கு பொருத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது கண்பார்வை இழந்த சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வாழ்ந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் 20 வீதமானவர்களின் விழிவெண்படலம் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

### கூட்டமைப்பு - சிவில்...

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையில் நியாயபூர்வமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதுடன், எவ்வகையிலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரி மையை விட்டுக் கொடுக்காத வகையில் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என இச்சந்திப்பில் தமிழ் சிவில் சமூகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், இக்கொள்கைக்கு ஆதரவான அனைத்து கட்சிகளுடனும் இணைந்து பேசி சரியான தொரு தீர்வை தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுத்தர வேண்டும் எனவும் வலியுறுத்திய தமிழ் சிவில் சமூகம், அதற்கான ஒத்துழைப்புக்களை தாம் முழுமையாக வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், அரசாங்கத் துடன் தமிழ்த் தேசிய சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்று சிவில் சமுகம் கோரியுள்ளது. நாங்கள் எந்த பதாதை களையும் தூக்கிக்கொண்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லவில்லை.

ஆனால் தமிழ் மக்களுக்குத் தேவையான நீதியான, நியாயமான, சுதந்திரமான, பொருளாதார, சமூக, கலாசார, பண்பாட்டுடன் கூடிய தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளோம். இதற்கு ஏனைய கட்சிகளுடனும், சமூகத்தினருடனும் இணைந்து பேசிக் கலந்துரையாடத் தயாரகவும் உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து பெரியதொரு கட்சியாக பதிவு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் முன்வைத்தார்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கல நாதன் உள்ளிட்ட பெரும்பாலான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### மேலைத்தேய...

தொடர்பாகவும், 2002 இல் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த செய்தி சிங்கள ஊடகங் கள் எதிலும் பிரசுரமாகவில்லை. இந்த விடயத்தின் பின்னணி குறி த்து பாரிய சந்தேகம் எழுகிறது.

ஐ.தே.க. தலைவர் பாரிய காட்டிக்கொடுப்பொன்றை செய்துள்ளார். இவர் எதிர்க்கட் சித் தலைவரா? இலங்கை நாட்டவரா? என்ற சந்தேகம் எழுகிறது. மார்ச் மாதம் இலங்கையை பலி எடுக்கும் மாதம் என சில சர்வதேச தரப்புகள் முன்கூட்டி ஆரூ டம் தெரிவித்துள்ளன. வியட்னாம், கொரியா, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் யுத்தக் குற்றங்கள் புரிந்த சில மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முயல்கின்றன. சர்வதேச சக்திகளின் இந்த முயற்சிக்கு ஐ.தே.க. தலைவர் தனது செயலினூடாக அழைப்பு விடுத்துள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பாணின் விலை...

அமைச்சருடன் இடம்பெறும் சந்திப்பை அடுத்து பாணின் விலையை அதிகரிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார். இந்த நிலையில் பாணின் விலை அதிகரித்தால் உள்நாட்டு அசிரி உற்பத்தியாளர்களுக்கு பாரிய நன்மை கிட்டும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

### 40 வீத சம்பள...

ஒன்றியத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி சம்பள உயர்வை வலியுறுத்தி போராட்டம் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து அரசாங்கம் எவ்வித கரிசனையும் கொள்ளவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

### மாதகல்...

கலைச் சேர்ந்த பீற்றர் பொனிபப்ர் (வயது-41) இடையில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்தார். இளவாலைப் பொலிஸார் குறித்த பஸ் நடத்துனரைக் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

### நன்மதிப்பை...

நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ச்சி யாக இடம்பெற்று வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். சிலாபத்தில் மீனவர் படுகொலை செய்யப்பட்டமை, நீதிமன்ற வளாகத்தில் கைதி கடத்தப்பட்டமை உள்ளிட்ட பல சம்பவங்களை உதாரணமாகக் காட்ட முடியும் எனஅவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் குறித்து பேசப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### நிரந்தர அரசியல்...

மாவட்டங்களின் அபிவிருத்தி தேவைகள் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்ட மக்களின் தற்போதைய தேவைகள், அவரகளின் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துக் கூறினார். அத்துடன் வடபகுதி மக்களுக்கு பிரித்தானிய அரசு செய்துவரும் உதவிகளுக்கும் வடபகுதி மக்களின் சார்பாக நன்றியினையும் தெரிவித்துக் கொண்டார்.

அதேவேளை, இலங்கையிலும் பிரித்தானியாவிலும் தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமைகள், பொறுப்புக்கள் நிர்வாக ரீதியிலான கட்டமைப்புக்கள் மற்றும் ஒற்றுமை, வேற்றுமை தொடர்பில் இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

அத்தோடு தற்போதைய சூழலில் புலம்பெய ர்ந்து வாழும் தமிழ் மக்கள் பலர் வடபகுதியில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளமையினையும் எதிர்காலத்தில் அவ்வாறு பலர் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றும் அதனை அரசு வரவேற்கத் தயாராகவுள்ளது என்ற செய்தியினையும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது இலங்கை நாடாளுமன் றத்தின் பிரதி சபாநாயகர் சந்திம வீரகொடி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் இணைப்பதிகாரி ராஜ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# குற்றச்செயலுக்குத் தண்டனை வழங்க சுயாதீன சர்வதேச விசாரணை அவசியம்

## தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை

(ஜெனிவா)

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்க, சுயாதீனமான சர்வதேச விசார ணைப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அமெரிக்காவிடம் கோரியுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவைகள் அமர்வுகளின் போது சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அந்த நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பகம், கார்டர்நிலையம், பிரஜைகளுக்கான சர்வதேச தீர்வுகள், ஜனநாயகக் கூட்டமைப்பு திட்டம், சுதந்திர இல்லம், மகளிர் உரிமை பெரும்பான்மை பேரவை உள்ளிட்ட உலகின் முன்னணி தன்னார்வ தொண்டுநிறுவனங்கள் கூட்டாக இணைந்து, இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உரியமுறையில் விசாரணை செயயப்பட்டு, நீதியை நிலைநாட்ட அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை உள்ளிட்ட பல்வேறு சர்வதேசஅறிக்கைகளில் யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என அந்தஅமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை என தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

# அல்லைப்பிட்டிப் பகுதியில் மலேரியா நோய்த் தடுப்பு

(திருநெல்வேலி)

அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்தில் 2 பேர் டெங்கு நோயினாலும், 2 பேர் மலேரியா நோயினாலும் பாதிக்கப்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் மலேரியா தடுப்புப் பகுதியினரால் மலேரியா நோய் பரவாமல் தடுப்பு மருந்து விசிறல் நடவடிக்கையும், டெங்கு நுளம்பு எதிர்ப்புக்கான புகையூட்டல் நடவடிக்கையும் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை இவை நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதேவேளை, வேலணை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ம.அனுசூதனன் ஊர்காவற்றுறை சுற்றுச்சூழல் பொலிஸாருடன் இணைந்து அப்பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குடம்பிகள் பெருகும் வகையில் வீட்டுக் காணிகளை வைத்திருந்த 7 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (137)

# தொழில்ரீதியான அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் தென்பகுதி வியாபாரிகள்




(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலிருந்து புறநகர் பகுதிகளுக்கு வெதுப்பக உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று விற்பனையில் ஈடுபடும் தென்பகுதி வியாபாரிகள் தொழில ரீதியான அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ். நகரிலிருந்து குறித்த பகுதிகளுக்கு வெதுப்பக உணவுப் பொருட்கள் மற்றும் சிற்றுண்டிகளை நடமாடும் வாகனங்கள் மூலமாக எடுத்துச்சென்று இவர்கள் விற்பனை செய்து வரும் நிலையில், அங்குள்ள வெதுப்பகங்களினால் இவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. மேலும் சிலர் இவ்வியாபாரிகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

இதனையடுத்து யாழ். நகர் பகுதியில் இவ்வாறு தென்பகுதி வியாபாரிகளை பணிக்கமர்த்தியிருக்கும் வெதுப்பகங்கள் செய்வதறியாது உள்ளன.

அத்துடன் சுன்னாகம், புத்தூர் பகுதிகளில் நடைபெற்ற இவ்வாறான சம்பவங்கள் குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதன் காரணமாக வெதுப்பக உணவுப் பொருட்களை நடமாடும் வாகனங்களில் எடுத்துச் சென்று விற்பனையில் ஈடுபடும் தென்பகுதி வியாபாரிகள் செய்வதறியாது உள்ளதாக தெரியவருகின்றது.

இவ்வாறான வியாபாரிகளின் நடவடிக்கை குறித்து வெதுப்பக உரிமையாளர் சங்கம் தலையிட்டு தகுந்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று சம்பந்தப்பட்ட வெதுப்பகங்கள் தெரிவித்துள்ளன. (பா)

# சோதனையில் சிக்கின உழவு இயந்திரப் பாகங்கள்

வன்னியிலிருந்து இரகசியமாக கொண்டு வரப்பட்ட உழவு இயந்திரப் பாகங்களை நெல்லியடி பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

வன்னியில் இருந்து நெல் மூட்டைகள் ஏற்றி நெல்லியடி நோக்கிவந்த லொறியை மாண்டான் பகுதியில் பொலிஸார் சோதனை செய்தனர்.

இதன்போது நெல் மூடைகளுக்குள் மறைத்து கொண்டு வரப்பட்ட உழவு இயந்திரப் பாகங்களை கண்டுபிடித்தனர். குறிப்பிட்ட உழவு இயந்திரப் பாகங்கள் திருடப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகத்தில் லொறியில் வந்தவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (18)

# இலங்கையர் உட்பட 40 சிறுவர் தடுப்பு நட்டஈடு வழங்கியது பிரிட்டன் அரசு

(கொழும்பு)

சிறுவர் அகதிகளை இளைஞர் அகதிகள் என தடுத்து வைத்திருந்த விவகாரத்தில் சுமார் 40 சிறுவர் அகதிகளுக்கு பிரித்தானிய அரசு 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக செலுத்தியுள்ளது.

சிறிய வழக்கு ஒன்றிற்கு பிரித்தானியா அதிக நட்டஈடு வழங்கிய விவகாரமாக இது மாறியுள்ளதென பிரித்தானியாவின் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்திட்டமானது சட்டத்திற்கு புறம்பானது என பிரித்தானிய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதோடு எதிர்காலத்தில் அதனை திருத்திக் கொள்வதாகவும் அறிவித்துள்ளது.

இருந்த போதும் குறித்த சிறுவர் அகதிகள் இன்னும் இளைஞர்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 16 நாடுகளைச் சேர்ந்த 25 சிறுவர்களும் 14 சிறுமியர்களும் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான், நைஜீரியா, எரித்திரியா, உகண்டா, சோமாலியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சிறுவர் அகதிகள் இதில் உள்ளடங்குவதாக பிரித்தானிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

முகாம்களில் இருப்பவர்களில் இலங்கையைச் சேர்ந்த 14 வயது சிறுமி ஒருவர் அவரது நாட்டில் சித்திரவதையில் இருந்து தப்பியவர் எனவும் மேலும் சிலர் வன்முறை, பாலியல் துன்புறுத்தல் என்பவற்றில் இருந்து காப்பாற்றப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவ நீதிமன்றம் அமைப்பு ஜாதிக ஹெல உறுமய வரவேற்பு

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ள இராணுவ நீதிமன்றம் ஒன்றை இராணுவத் தளபதி நியமித்துள்ளதை ஜாதிக ஹெல உறுமய வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க கருத்து வெளியிடுகையில், பொறுப்புக் கூறும் விவகாரத்தில் இலங்கை பொறிமுறை ஒன்றைக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அமெரிக்காவின் அழுத்தத்தின் பேரில் இந்த இராணுவ விசாரணை நீதிமன்றம் நியமிக்கப்பட்டிருந்தால் அதனைத் தாம் எதிர்ப்பதாகவும் அவர மேலும் கூறியுள்ளார்.

# வடக்கில் இராணுவமுகாம் அகற்றல் பாதுகாப்புச் சபை முடிவெடுக்கும்

## கோத்தாபய தெரிவிப்பு



(கொழும்பு)

வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுவது தொடரபான முடிவை எடுக்கும் அதிகாரம் அரச பாதுகாப்புச் சபைக்கே உள்ளதென பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கில், உள்ள இராணுவ முகாம்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. அண்மையில், இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க உயர் அதிகாரிகள் இது குறித்து, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கு அறிவித்துள்ளனர்.

எனினும் இதற்கு பதிலளித்துள்ள பாதுகாப்புச் செயலாளர், இலங்கையில் வடக்கில் போன்றே தெற்கிலும் இராணுவ முகாம்கள் இருப்பதாகவும் அவற்றை அகற்றுவது குறித்து தீர்மானிப்பது, அரச பாதுகாப்புச் சபையே என கூறியுள்ளார். அத்துடன் சுதந்திரமான நாடு என்ற வகையில், இலங்கையில் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பில், தீர்மானங்களை எடுக்க இலங்கைக்கு சுதந்திரம் உள்ளதாகவும் கோத்தாபய தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விலை அதிகரிப்பு பெண்களும் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை நீர்கொழும்பு பெண்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டம் நீர்கொழும்பு நகர மத்தியில் கிரீன்ஸ் வீதியில் இடம்பெற்றது.

நீர்கொழும்பு கடோலகலே பிரதேசத்தில் வசிக்கும் மீனவ குடும்பங்களை சேர்ந்த பெண்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களாவர் சிலாபத்தில் அன்ரனி பெர்னாந்து என்ற மீனவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர்.

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் பொருளாதார சுமை தாங்க முடியாத அளவு இருப்பதால் பெண்கள் என்ற ரீதியில் தங்களது எதிர்பை தெரிவிப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குறிப்பிட்டனர்.

# தங்கமென உலோகம் விற்றவர்கள் கைது

தங்கம் என தெரிவித்து ஒரு வகை உலோகத்தை விற்பனை செய்ய முயன்ற இரண்டு சந்தேகநபர்கள் செட்டிகுளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட தங்கம் எனக் கூறி சந்தேகநபர்கள் குறித்த உலோகத் துண்டுகளை விற்பனை செய்ய முயற்சித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 635 உலோகத் துண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை வவுனியா நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கடும் வெயிலில் மழைக்கவசம்

(யாழ்ப்பாணம்)

சுட்டெரிக்கும் வெயில்-வேளைகளிலும் கடும் வியர்வையினையும் பொருட்படுத்தாது மழைக்கவசம் ஜக்கெட் அணிந்து கொண்டு பிரயாணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை குடாநாட்டின் பல பிரதான வீதிகளிலும் இருப்பதையிட்டு பாதசாரிகளும் மோட்டார் சைக்கிள் பயணிகளும் பெரும் கவலையடைகின்றனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியின் நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு உள்ளிட்ட பல பகுதிகளிலும் மிக மந்த கதியில் வீதித் திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் காரணமாக அவ்வீதியால் செல்லுகின்ற பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள், மோட்டார் சைக்கிள் பயணிகள் பாரிய புழுதிப் புயலுக்கு மத்தியிலேயே பயணம் செல்லும் நிலை காணப்படுகின்றது.

இதனால் அவர்களின் உடைகள் அழுக்கடைவதால் அன்றாட கடமைக்கு செல்பவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

அநேகமான பயணிகள் கடும் வெயில் வெப்பத்தையும் வியர்வையையும்கூடப் பொருட்படுத்தாது ஜக்கெட்டுடன் பயணம் செய்யவேண்டிய நிலையே காணப்படுகின்றது. (03)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.